சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 6 | இதழ்: 06 | நவம்பர் - 2024 | விலை - ரூ.15/-

VOL:6 | ISSUE: 06 | November - 2024 | Rs. 15/-



திருப்புகழ் தந்த "அருணகிரிநாதர்"

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-06 நவம்பர்-2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

நீ வேண்டிய பிரார்த்தனை இன்னும் நிறைவேறவில்லை என்ற ஆதங்கத்தில் என்னிடம் உனக்கு கோபமா? ஏதேதோ பேசுகிறாயே! சற்று நிதானமாக யோசித்துப் பார்! எனக்கு நீ மட்டுமா குழந்தை. நீங்கள் அத்தனை பேருமே குழந்தைகள் அல்லவா? தாய்க்கு எத்தனை குழந்தைகள் இருந்தாலும் எல்லோரும் சமம்தானே!

நான் உன் தாயல்லவா. நான் பொறுக்கி எடுத்த வைரங்களில் நீயும் அடக்கம். நான் இல்லாமல் நீ எப்படி தனித்து ஒரு நொடியும் இருக்க முடியாதோ அப்படித்தான் உன்னை பிரிந்தும் என்னால் ஒரு நொடியும் தனித்திருக்க முடியாது.

உனது வேண்டுதல் கண்டிப்பாக நிறைவேற்றப்படும். அதற்கான காலம் கைகூடி வந்து விட்டது. அமைதியாக இரு. உன் அனைத்து காரியங்களையும் நானே முன் நின்று நடத்துவேன் இது சத்தியம்.

என் மேல் நம்பிக்கைகொண்டு பயமற்றவனாக இரு. துவக்கமும் முடிவும் இல்லாதவன் நான். நீ செய்த பாவங்கள் அனைத்தும் நான் அறிவேன். இப்பிறவியில் நீ எப்படி செயல் படுவாய் இனி வரும் பிறவியில் எப்படி இருப்பாய் என்பதையும் நான் அறிவேன்.

எனது பிள்ளைகள் கவலைப் படும் போது அதை நிவர்த்தி செய்வது எனது கடமை பொறுத்திருந்து இனி நடக்க போவதை பார். உன் கோபம் எல்லாம் மறைந்து போய் என்னை கொண்டாடப் போகின்றாய்!

-பகவான் சீரடி சாய்பாபா.

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் எழுபத்தி ஆறாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா, 06.10.24 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில்" (9/1கி, பழனியப்பா 2 ஆவது தெரு, அயனாவரம், சென்னை23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.



காலை 8.00 மணிக்கு சத்சங்கம், தியானத்துடன் துவங்கிய விழாவில், புத்தக வெளியீடு காலை பத்து



மணிக்குத் தொடங்கியது. இம்மாத இதழை ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சரிதாம்ருதம், அக்கல்கோட் மகராஜ் லீலாமிர்தம், அவதூத கீதை ஆகிய நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பாளர் திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் வெளியிட, பீகாரைச்சேர்ந்த சாயி பக்தை. திருமதி. மம்தா அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.



விழாவில் திரு. சுந்தர்சாய் அவர்கள் பக்தர்களிடையே சொற் பொழிவாற்றினார். திருமதி. மாதங்கி பாலாஜி, திரு. உதிமூர்த்தி, திருமதி. தனம் அகஸ்டின் ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டனர். திரு. அகஸ்டின், திரு. இராஜ சேகரன், திரு. சுந்தர வடிவேலு ஆகியோர் விழாவினில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் சாய் தியானாலயா அன்னதானக் குழுவினர் அன்னதானம் வழங்கினர். புத்தக வெளியீட்டை ஒட்டி இல்லாதோருக்கும், இயலாதோருக்கும் அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

சிறுகுழந்தைகள் தவறு செய்து விட்டு, தவறுக்கு வருந்தாமல் தான் செய்ததை நியாயப்படுத்துவதைப்



போன்று இம்மக்கள், சீற்றத்தை நிறுத்து, மழையை நிறுத்து, புயல் வெள்ளத்தில் இருந்து எம்மை காப்பாற்று பாபா என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

இன்று நிகழும், இனி நிகழப் போகும் அனைத்து இயற்கை பேரழி வுகளுக்கும் நாம் செய்த தவறுகளே காரணம் என்று உணர்ந்து, என்று நாம் இறைவனிடம், நான் செய்த தவறுக்குண்டான தண்டனையாக இந்த புயல் வெள்ளம் மழையை ஏற்றுக்கொள்கின்றோம் என்று கூறு கின்றோமோ அன்றுதான் இறை வனின் கருணைக்கு நாம் பாத்திர மாகி இயற்கை பேரழிவுகளில் இருந்து காப்பாற்றப்படுவோம்.

செய்த தவறுக்கு பிராயச்சித்த மாக, இயற்கையோடு இணைந்து வாழப்பழக வேண்டும். போதை பழக்கத்தில் இருந்து விடுபட வேண்டும். வாழ்க்கையை அனைத்துவிதத்திலும் எளிமையாக மாற்றிக்கொள்ள வேண்டும். முடிந்தவரையில் வாகனங்களை தவிர்த்து நடந்து செல்ல வேண்டும்.

சக மனிதர்களை மதிக்க வேண்டும். அவர்களோடு எல்லா வித்திலும் இணக்கமாக இருக்க வேண்டும். முக்கியமாக நமது இந்து தர்மத்தை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். அதன்படி நாமும் நடந்து நமது குழந்தைகளையும் நடத்திப் பழக வேண்டும். எனவே வாழும் காலத் தில் அடுத்தவருக்கு உதாரணமாக வாழவேண்டுமே தவிர பாரமாக வாழக்கூடாது. என்றுகூறி, அனைவருக்கும் எமது "தீப ஒளி" திருநாள் வாழ்த்துக்களை தெரி வித்துக் கொள்கின்றோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலகமாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்ச மின்றி ஆரோக்கியத்துடன், மன நிம்மதியுடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

ஓம் சாய்ராம்.

நலமுடன் வாழ்வோம்



சாய் அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம்! நமது அன்றாட வாழ்வில் அல்லல்கள் அனேகம். கோடிப் பிரட்சனைகள் இருப்பினும் தீர்வு ஆன்மீக வாழ்வில் மட்டுமே உள்ளது. என்பது ஆண்டுகள் ஸ்தூல உடலுடன் வாழ்ந்து, இன்றளவும் நமக்கெல்லாம வழித்துனையாய் வலம்வரும் பிரபஞ்ச மகா சக்தி ஸ்ரீ சாயி மகராஜ் நமக்களித் ஓர் எளிய மகா மந்திரம்...

" ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

மிக எளிமையான இம்மந்திரத்தை எழுதிக்கொண்டே ஜபிப்போமானால் நம் தலையெழுத்தையே மாற்றி அமைக்க வல்லது.**'லிகித'** என்றால் எழுதுவது "இந்த லிகித நாம ஜபத்"தை தினமும் 108 முறை உச்சரித்துக் கொண்டே எழுதி, நம் கர்மவினையின் தாக்கத்தை முறியடிப்போம் வாரீர்.

ஆர்வத்துடனும், பக்தியுடனும், எழுத, எழுத பிரபஞ்ச மஹா சக்தியானது பேரருளாய் மலர்ந்து நம் வாழ்வினில் மன நிம்மதியையும், முன்னேற்றத்தையும் வழங்கும். என்றென்றும் குருவருள் திருவருளாய் திகழ்ந்திட சாயிநாமம் சொல்லிக் கொண்டே வாழ்வில் வளம் பெருவோம்

எக்கும் சாய்! எதிலும் சாய்!

எல்லாமே சாய்! குருவே துணை!

<u>விபரங்களுக்கு:</u>

"பாராயணப் பகலவன்"

திரு. சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

சாயி சொந்தங்கள் அனைவருக்கும் தீப ஒளி திருநாள் வாழ்த்துக்கள். இம்மாதம் நமது குரு ஸ்ரீராம் பாபா அவர்கள் கொடுத்த பயிற்சியினாலும், பகவான் சாயிநாதரின் ஆசியினாலும் ஒரு மாற்று மத சகோதரன் தன் இழந்த வாழ்வை எப்படி மீட்டுக்கொண்டார் என்பதனைக் காண்போம்.

சாய் தியானாலயா ஆத்ம ஞான சபையின் ஆரம்ப காலம். நமது குரு அப்போது அனைவருக்கும் யோகாசனம் கற்றுக்கொடுக்கும் பயிற்சியாளராகவும் இருந்தார். அயனாவரம் கொன்னூர் மெயின் ரோட்டில் உள்ள காம்ப்ளக்ஸ்சில் இரண்டாவது மாடியில் நமது சபை அமைந்திருந்தது. ஒருநாள் இரவு ஏழு மணியிருக்கும். மாடிப் படியில் யாரோ சிரமப்பட்டு ஏறிவருவதைப்போன்று பேச்சுக் குரல் கேட்டது. நான் சென்று பார்த்தேன்.




– ஜெயந்தி ஸ்ரீராம்

அங்கே ஒரு இளைஞனை, ஒரு இளம் பெண் கைத்தாங்கலாக மாடிப்படியினில் ஏற்றி அழைத்து வருவது தெரிந்தது. சிறிது நேரத்தில் அவர்கள் சபைக்கு வந்து சற்று மூச்சுவாங்கிக் கொண்டார்கள். அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து உபசரித்துவிட்டு குருவிடம் தகவல் கூறினேன். அவர்களும் குருவிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

வந்த இருவரும் மாற்றுமதத்தைச் சேர்ந்தவர்கள். ஆறு வருடங்களாக காதலிக்கின்றார்களாம். சென்ற வருடம் நடந்த ஒரு வாகன விபத்தில் இளைஞனுக்கு முதுகு தண்டுவடத்தில் முறிவு ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மீண்டு வந்திருக்கின்றான்.

ஆனால் மருத்துவர்கள் அவன் முன்பு போல் செயல்பட முடியாது என்றும், குறிப்பாக திருமண வாழ்க்கை அவனுக்கு சாத்தியமில்லை என்றெல்லாம் கூறி அவனை மேலும்



கவலைக்குள்ளாக்கி இருக்கின்றார்கள்.

மிகவும் மனம் ஒடிந்த நிலையில் இருந்த இளைஞனுக்கு அவனது தோழிதான் ஆறுதல் கூறி, நாம் யோகாவை முயற்சித்துப் பார்ப்போம் என்று கூறி நமது யோகா நிலையத்திற்கு அழைத்து வந்திருக்கின்றாள்.

அவர்களது கதையைக்கேட்ட குரு அந்த இளைஞனுக்கு ஆறுதல் கூறி, நான் என் குருவின் அருளால் உனக்கு யோகப்பயிற்சியளித்து உன்னை முழுமையாக குணப் படுத்துகின்றேன்.

கவலைப்பட வேண்டாம் என்று கூற, அவர்களோ, சார் நாங்கள் இந்த பயிற்சியை எடுத்துக் கொள்வதற்காக நாங்கள் உங்கள் குருவை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்க,

குருவோ நான் என் குருவின்

அருளால் செய்கின்றேன் என்று தான் கூறினேன். என் குருவை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று உங்களிடம் என் குருவையோ கடவுளையோ திணிக்கும் வேலையை நான் செய்ய மாட்டேன். ஆனால் நீங்கள் என்னை குருவாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். குரு பக்தியில்லாமல் இங்கு ஏதும் நடக்காது. அதற்கு உங்களுக்கு ஏதும் தடையிருக்கின்றதா என்று கேட்டார். அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை என்றார்கள் அவர்கள் இருவரும்.


அப்படியானால் நம்பிக்கையுடன் நாளையில் இருந்து வகுப்பிற்கு வாருங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார். அவர்களும் மறுநாள் காலையில் வகுப்பிற்கு வந்துவிட்டார்கள். யோகப்பயிற்சிகள் அவ்விளைஞனுக்கு சற்று சிரமமாக இருந்தாலும் ஆர்வத்தோடு கற்றுக்கொண்டார். அவனுடைய தோழியும் உடன் இருந்து அவனுக்கு உதவி செய்தாள்.

ஒரு மாதத்தில் மிக நல்ல மாற்றம் ஏற்பட்டதை அடுத்து யோகப்பயிற்சிகளை முழுமனதோடு ஏற்றுக்கொண்டு பயிற்சி செய்து வந்தான். குருவின் மதத்தன்மையற்ற அன்பான அணுகுமுறையால் ஈர்க்கப்பட்ட இளைஞன் குருவை முழுமனதாக குருவாக ஏற்றுக் கொண்டு அவரிடமே தியானம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான். குருவும் அவனை சீடனாக ஏற்றுக்கொண்டு அவனுக்கு தீட்சை வழங்கி தியானமும் கற்றுக்கொடுத்தார்.

மூன்று மாதங்கள் தீவிர யோகப் பயிற்சிக்குப்பின் நன்றாக நடக்க ஆரம்பித்தவன் யாருடைய துணையுமின்றி இரண்டாவது மாடியில் இருக்கும் நமது சபைக்கு தனியாக வருமளவிற்கு தேறினான். உடல்நலம் தேறியதும் தனது பழைய கம்பெனியில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினான். இருப்பினும் விடாமல் குருவிடம் யோகா, தியானம் ஆகியவற்றை கற்றுக்கொண்டிருந்தான்.

ஒரு வருடம் சென்றது. ஒரு நாள் குருவிடம் தன் தோழியைப் பற்றி மனம் விட்டு பேசியிருக்கின்றான். தனக்காக கடந்த இரண்டு வருடங்களாக பல உதவிகள் செய்து கொண்டிருக்கும் தனது தோழிக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகின்றேன் என்று தெரியவில்லை. அவளோ என்னை கணவனாக அடைய ஆசைப்படுகின்றாள். ஆனால் நான் அவளுக்கு நல்ல கணவனாக இருப்பேனா என்று தெரியவில்லை.

மருத்துவர்கள் நான் இல்லறத்தில் ஈடுபட முடியாது என்று கூறியிருக்கின்றார்கள். நான் இப்போது என்ன செய்வது என்று தெரியவில்லை என்று கூறியிருக்கின்றான். குரு அவனுக்கு பல ஆலோசனைகள் வழங்கி நீ எதற்கும் பயப்படாமல் திருமணம் செய்து கொள். உனக்கு நம்பிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும் இப்போதும் நான் கூறுகின்றேன்.



பக்க உறவுக்காரர்களாலும் மிகவும் காயப்பட்டு ஒருநாள் வெகுநாட்களுக்குப்பின்பு குருவை சந்திக்க வந்தார்கள். குரு அவர்களை அன்போடு வரவேற்று என்ன வேண்டும் என்று கேட்க, அவர்களும் தங்களது பிரட்சனையை பகிர்ந்து கொண்டிருக் கின்றார்கள்.

குரு அவர்களுக்கு சில யோகாசனப் பயிற்சிகளை சொல்லிக்கொடுத்து சில அறிவுரைகளையும் வழங்கி, "மதம்" உங்களது அடையாள மாக இருக்கட்டும், "அறிவே" உங்களை வழிநடத்துவதாக இருக்கட்டும். இப்போதும் கூறுகின்றேன். எனது சற்குரு உங்களுக்கு குழந்தைச் செல் வத்தை அருள்வார் என்று அவர் களுக்கு ஆசி கூறி அனுப்பிவைத்தார்.

அடுத்த ஆண்டே அவர்களது சொந்த பந்தங்கள் வியக்கும் வண்ணம் அவர்களுக்கு ஒரே பிரசவத்தில் ஆண் ஒன்றும், பெண் ஒன்றுமாய் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. நன்றி மறவா தம்பதிகள் இன்றும் அவர்களது பிறந்தநாள் அன்று நமது சாய் தியானாலயா அன்னதானத்தில் கலந்துகொண்டு ஆனந்தப்படுகின்றனர். என்னே அற்புத சாயி நாதரின் ஆனந்த லீலைகள்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி! அடுத்த மாதம் மீண்டும் சந்திப்போம்.

- ஓம் சாய்ராம்.

எனது குரு உன்னை ஆனந்தமாக வாழவைப்பார் இது சத்தியம். என்று கூறியிருக்கின்றார்.

குருவின் பேச்சால் உற்சாக மடைந்த இளைஞன் பெண் வீட்டாரை சமாதானப்படுத்தி குருவிடம் அழைத்து வந்திருக் கின்றான். குருவும் அவர்களிடம் பேசி ஒருவழியாக அவர்களது சந்தேகத்தை தீர்த்து வைக்க, இரண்டு மாதத்தில் அதே பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை துவக்கி யிருக்கின்றான். அதற்கப்புறம் அவர்கள் குருவிடம் வரவில்லை.

இரண்டு வருடங்கள் ஓடி விட்டது. தம்பதிகளுக்கு குழந்தை இல்லை. என்பதால் இரண்டு

ஞானத்தை யாரிடம் கற்பது?

"குரங்கு சாவதற்கு ஒரே ஒரு புண் போதும்

முட்டாள் சாவதற்கு ஒரே ஒரு பிரச்சினை போதும்" என்று கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு. காடுகளில் வாழும் குரங்குகள் பெரும்பாலும் நோய் வாய்ப்படுவதில்லை. ஆனால் அவைகளுக்கு ஒரே ஒரு புண் வந்துவிட்டால் போதும். அதை நோண்டி நோண்டிப் பெரிதாக்கித் தன்னையே அழித்துக் கொள்ளும்.

அதுபோலத்தான் மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு குழம்பி, குழம்பி அதைப் பெரிதாக்கிக் கொள்வதும் நடக்கின்றது.

அந்தக் குரங்கு கொஞ்சம் பொறுமையாய் புண்ணை நோண்டாமல் இருந்தாலே போதும், புண் விரைவில் ஆறிவிடும். இதை குரங்குக்குச் சொன்னாலும் புரியாது. அது புண்ணை நோண்டுவதை நிறுத்தப் போவதில்லை. ஆனால், மனிதன் புரிந்து கொள்ள முடியும் தானே?

மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டிப் அதைப் பெரிதாக்கிக் கொள்ளாமல் வாழமுடியும் அல்லவா?

மனித மனம் வெறும் "மனம்" மட்டுமே! மனித மனம் குரங்கு அல்ல, என்ற புரிந்து கொள்ளுதல் தான் "ஞானம்" இந்த புரிதல் எப்போதும் இயற்கையில் எதிர்பாராத தருணங்களில் நடந்து கொண்டேதான் இருக்கிறது. இதில் புரிந்து கொள்வது சீடர்கள். புரிய வைப்பவை குரு. இந்த மொத்த நிகழ்வும் "ஆன்மிகம்" எனப்படுகிறது, அவ்வளவே!

தத்தாத்ரேயர் எனும் அவதூதர் காட்டில் சுற்றிக் கொண்டிருந்த போது, ஒரு நாட்டின் மன்னனைச் சந்தித்தார். தத்தாத்ரேயர் மிக மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்ட அரசன், அவரது மகிழ்ச்சிக்கான காரணத்தையும், அவரது குரு யார்? என்பதையும் கேட்டான்.

'எனக்கு 24 குருமார்கள் இருக்கின்றனர் என்றார் தத்தர். இந்தப் பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்ட அரசன், "சுவாமி! ஒருவருக்கு ஒரு குரு தானே இருக்க முடியும்? தங்கள் பதில் வித்தியாசமாக உள்ளதே' என்றான்.

அவனிடம், பஞ்சபூதங்களான ஆகாயம், நீர், நிலம், நெருப்பு, காற்று, சந்திரன், புறா, மலைப்பாம்பு, கடல், விட்டில் பூச்சி, வண்டு, தேனீ, குளவி, சிலந்தி, யானை, மான், மீன், பருந்து, பாம்பு ஆகியவையும், நாட்டியக்காரி பிங்களா, ஒரு குழந்தை, ஒரு பணிப்பெண், அம்பு தயாரிப்பவன், சூரியன் ஆகியோரும் என் குருக்கள் ஆவர். என்றார் தத்தர்.

மன்னன் ஏதும் புரியாமல் நின்றதைக் கண்ட தத்தாத்ரேயர் இதற்கு விளக்கமளித்தார். மன்னா! பொறுமையை பூமியிடம் கற்றேன், தூய்மையை தண்ணீரிடம் தெரிந்து கொண்டேன். பலருடன் பழகினாலும், பட்டும், படாமல் இருக்க வேண்டும் என்பதைக் காற்றிடம்

படித்தேன்.

எதிலும் பிரகாசிக்க வேண்டும் என்பதை தீ (நெருப்பு) உணர்த்தியது. பரந்து விரிந்த எல்லையற்ற மனம் வேண்டும் என்பதை ஆகாயம் தெரிவித்தது. ஒரே சூரியன் இருந்தாலும் பல குடங்களில் உள்ள தண்ணீரில் பிரதிபலிப்பது போல மெய்ப் பொருள் ஒன்றாக இருந்தாலும் மனம் பலவாறாக சிந்திப்பதை உணர்ந்தேன்.



வேடன் ஒருவன் புறாக்குஞ்சுகளைப் பிடித்தான். அவற்றின் மீது அன்பு கொண்ட தாய்ப்புறா தானும் வலியச் சென்று வலையில் சிக்கியது. இதில் இருந்து பாசமே துன்பத்திற்கு காரணம் என்பதை உணர்ந்தேன். எங்கும் அலையாமல் தன்னைத் தேடி வரும் உணவைப் பிடித்துக் கொள்வது போல, கிடைப்பதை உண்டு பிழைக்க வேண்டும் என்பதை மலைப்பாம்பிடம் கற்றேன்.

பல்லாயிரம் நதிகளை ஏற்றுக் கொள்ளும் கடல் போல, எவ்வளவு துன்பம் வந்தாலும் ஏற்கும் பக்குவத்தை கடலிடம் படித்தேன்.

பார்வையை சிதற விடாமல் ஒரே இடத்தில் மனதை செலுத்துவதை விட்டில் பூச்சி கற்றுத் தந்தது. எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியாயிருப்பதை தாயிடம் பால் குடிக்கும் குழந்தையிடம் கற்றேன்.

பணிப்பெண் ஒருத்தி அரிசி புடைக்கும் போது வளையல்கள் உரசி ஒலி எழுப்பின, இரண்டு வளையல்களில் ஒன்றை அவள் கழற்றியதும், ஒலி அடங்கியது. இதில் இருந்து இரண்டு பேர் இருந்தாலும் தேவையற்ற விவாதம் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு, தனிமையே சிறந்த தென்ற முடிவுக்கு வந்தேன்.

புற்களால் குழிக்குள் மாட்டிக் கொண்ட பெண் யானையைப் பார்த்த ஆண் யானை, அதன் மேல் ஆசை கொண்டு அதுவும் வீழ்ந்தது. இதில் இருந்து, பெண்ணாசையும் துன்பத்துக்கு காரணம் என்பதை உணர்ந்தேன் என்று ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமளித்தார்.

இதைக் கேட்ட அரசன், பூரண அமைதி அடைந்தான். தத்தர் இயற்கையிடம் கற்ற இந்த உயர்ந்த பாடம் நம் எல்லாருக்குமே பொருந்தும் தானே. தத்தாத்ரேயரின் "அவதூதகீதை" பகவான் ராமகிருஷ்ணர், ரமண மகரிஷி போன்ற பல மஹான்களால் சீடர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட அத்வைத கிரந்தமாகும்.

நல்ல சீடனுக்கு நல்லவை புகட்டும் எல்லாமே குருதான்.

– வே.ஸ்ரீராம்



சாய் சரிதம் - 8

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா

எங்களைக் கண்டதும் பாபா சற்றும் தாமதிக்காமல் "தீட்சித் வாதாவில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது எதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தீர்கள்" என்று கேட்டார். வாதாவில் நாங்கள் பேசிக் கொண்டிருந்த அனைத்தையும் பாபா அறிந்திருக்கின்றார் என்று நினைத்த காகா மஹாஜனி பாபா என்ன சொல்லப் போகின்றாரோ என்ற பயத்தில் ஏதும் பேசாமல் அமைதியாக இருந்தார்.

உடனே பாபா, பீஷ்மாவை நோக்கி, மஹாஜனி என்ன சொல்கின்றார் என்று கேட்க, பீஷ்மா, ஸ்ரீ இராமநவமி திருவிழா கொண்டாடுவதை பற்றி பேசியதை தெரிவித்து, இப்போது உங்களின் அனுமதி கிடைத்தால் போதும் என்றார். பாபா உடனே, தாராளமாக கொண்டாடுங்கள் என்று பீஷ்மாவைப் பார்த்துக் கூறினார்.

உடனே நாங்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்து விழா ஏற்பாடுகளை செய்ய ஆயத்தம் ஆனோம்.

மறுநாளே துணிகளைக் கொண்டு மசூதி முழுவதும் அலங்கரிக்கும் வேலை தொடங்கியது. இராதகிருஷ்ணமாயி குழந்தை இராமர் உறங்குவதுபோன்ற சிலையுடன் ஒரு தொட்டிலை தயார் செய்து கொடுத்தாள்.

தொட்டில் பாபா அமரும் இடத்திற்கு முன்னால் வைக்கப்பட்டு இராமநவமி விழா ஆரம்பமாயின. பீஷ்மா கீர்த்தனை பாடுதற்காக



எழுந்து நின்றார். மஹாஜனி ஹார்மோனியம் வாசிக்க ஆரம்பித்தபோது லெண்டிக்குச் சென்றிருந்த பாபா அங்கு வந்தார்.

பாபாவைக் கண்டதும் மகாஹனி, பாபா முழுவிழாவையும் நன்றாக நடத்துவதற்கு அனுமதிப் பாரா என சந்தேகம் கொண்டு பாபாவை சந்தேகத்துடனும், பயத்துடனும் பார்த்தார். அதற்கேற்றார்போல் பாபா மசூதியில் நுழைந்ததும் மஹாஜனியைப் பார்த்து இங்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது, அது என்ன தொட்டில் என்று கேட்டார்.

மஹாஜனி, சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, இராம நவமி விழாவிற்காக தொட்டில் வைக்கப்பட்டிருக் கின்றது பாபா, நீங்கள் ஆணையிட்டால் விழாவை துவங்கிவிடுவோம் என்று கூறினார்.

உடனே பாபா நிம்பாரில் இருந்து இரண்டு மாலைகளை எடுத்து, ஒன்றை அவர் கழுத்தில் இட்டார். மற்றொன்றை பீஷ்மாவை அருகில் அழைத்து அவரது கழுத்தில் இட்டு ஆரம்பிக்கலாம் என்றார்.

உடனே பீஷ்மா கீர்த்தனை பாட ஆரம்பிக்க மஹாஜனி ஹார்மோனியம் வாசிக்க இராம நவமி திருவிழா கோலாகலமாக ஆரம்பம் ஆனது. கீர்த்தனைகள் முடிந்ததும் ஸ்ரீராமருக்கு ஜே என்ற கோஷம் வானைப் பிளந்தது. வாத்திய கோஷ்டிகள் இடைவிடாமல் இசைத்த வண்ணம் இருந்தனர். வண்ணப் பொடிகளை ஒருவர் மீது ஒருவர் வீசியபடி மக்கள் பெருமகிழ்ச்சியாக இருக்கையில் பாபா பெரும் கோபத்துடன், பக்தர்களை திட்டவும், கையில் கிடைப்பதை எடுத்து அடிக்கவும் ஆரம்பித்தார்.

பாபாவின் தீடீர் ஆவேசத்தால் பக்தர்கள் பயந்தபடி ஆளுக்கொரு திக்கில் ஓட்டம் பிடித்தனர். பாபாவை நன்கு அறிந்த நெருங்கிய அடியவர்கள் மட்டும், பாபாவின் வசவுகளையும், அடியையும் அவருடைய ஆசீர்வாதங்கள் என்று எடுத்துக் கொண்டனர். மேலும் சீரடியில் ஏதாவது புதிய நிகழ்ச்சி நடக்குமேயானால் பாபா கடுமையாக கோபம் அடைவது வழக்கம். எனவே அவர்கள் அமைதியாக இருந்தனர்.

இராதாகிருஷ்ணமாயி தான் ஏற்பாடு செய்திருந்த தொட்டிலை பாபா கோபத்தில் உடைத்துவிடப் போகின்றார் என்று பயந்து காகா மஹாஜனியின் தொட்டிலை பாதுகாப்பாய் எடுத்துக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டாள். அவரும் மெதுவாகச்சென்று தொட்டிலை எடுக்கச் சென்ற போது, பாபா மஹாஜனியிடம் இப்போது ஏன் தொட்டிலை எடுக்கின்றாய். நிகழ்ச்சி முடியாமல் தொட்டிலை எடுக்கக்கூடாது என்பது உனக்குத் தெரியாதா? அருகில் வராதே! தூரப்போய்விடு என்று கூறினார்.

சற்று நேரத்தில் பாபா சாந்தமடைந்தார். ஒவ்வொருவராக மீண்டும் மசூதிக்குள் சென்று மஹா பூஜை, ஆரத்தி போன்ற அன்றாட நிகழ்ச்சிகளை எல்லாம் செய்து அன்றைய விழாவை நிறைவு செய்தார்கள். அடுத்த நாள் கீர்த்தனையும், உறியடி நிகழ்வும் நடந்தன. அதன்பின்பு பாபா மஹாஜனியிடம் இப்போது தொட்டிலை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

இவ்விழா நடந்து கொண்டிருக்கும்போதே, பகலில் இரண்டு கொடி ஊர்வலமும், இரவில் சந்தனக்கூடு ஊர்வலமும் வழக்கமான ஆராவாரத்துடன், கோலாகலத்துடனும், நடைபெற்றது. இத்தருணத்தில்தான் பாபாவின் உருஸ் விழா இராமநவமி திருவிழாவாக மாற்றப்பட்டது.

அடுத்த ஆண்டில் அதாவது 1913 ல் ஸ்ரீராம நவமி விழா நிகழ்ச்சிகள் அதிகரிக்க ஆரம்பித்தன. இராதாகிருஷ்ணமாயி இறைவனது



புகழை தொடர்ந்து ஏழுநாட்கள் இடைவிடாமல் பாடும் “ நாம சப்தாகம்” ஆரம்பித்தாள். இந்நிகழ்ச்சியிலும் அனைவரும் முறை வைத்து பங்கெடுத்துக்கொண்டனர். இராதாகிருஷ்ணமாயியும் அதிகாலையில் வந்து பங்கெடுத்துக் கொண்டாள்.

இராமநவமிவிழாநாடுமுழுவதும் கொண்டாடப்படுவதால், விழாவில் பாடுவதற்கு பாலபுவாமாலி, பாலபுவா ஸாதார் என்ற பாடகர்களுக்குப் பின்பு வேறு பாடகர்களை ஏற்பாடு செய்வது மிகவும் சிரமமாக இருந்தது. 1914 ல் இருந்து பாடுவதற்காக தாஸ்கணு மகராஜை பாபாவே நியமித்தார். அவரும் தன் கடைசி காலம்வரை அப்பணியை வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றினார்.

1912 ல் இருந்து ஒவ்வொரு ஆண்டும் திருவிழா படிப்படியாக வளரத் தொடங்கியது. சித்திரை8 ந் தேதியில் இருந்து12 ந் தேதிவரை சீரடியில் எங்குபார்த்தாலும் மக்கள் தலைகளே தென்பட்டன. கடைகள் அதிகரிக்கத் தொடங்கின. புகழ்பெற்ற மல்யுத்த வீரர்களின் மல்யுத்தப் போட்டிகள் நடத்தப் பட்டன. முன்னைவிட தற்போது மிகப்பெரிய அளவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டன.

குறிப்பாக இராதாகிருஷ்ண மாயியின் கடுமையா உழைப்பு சாதாரணமான ஒரு கிராமமாக இருந்த சீரடியை ஒரு சமஸ்தான மாக்கியது. ஒரு சமஸ்தானத்திற் குண்டான பொருட்கள் அனைத்தும் இராதாகிருஷ்ண மாயியினால் திரட்டப்பட்டன. ஒரு அழகான குதிரை, பல்லக்கு, ரதம், பல வெள்ளிப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், அலங்கார விளக்குகள், கண்ணாடிகள், என்று அனைத்துப் பொருட்களும் அன்பளிப்பாக வாங்கப்பட்டன.

இவ்வாறு தான் எளிமையாக வாழும் மசூதி இராதாகிருஷ்ணமாயியால் ஒரு சமஸ்தானமாக மாற்றப் பட்டாலும், அவற்றை எல்லாம் தான் உபயோகப் படுத்தாமல் முன்பு போலவே எளிமையாக வாழ்ந்து வந்தார். சீரடியில் பாபாவின் முன் நிகழ்ந்த இரண்டு ஊர்வலங்களிலும், இந்துக்களும், முகம்மதியர்களும் ஒன்றாக வேலை செய்தும் அவர் களிடையே இன்றுவரை எவ்வித மான சண்டையோ சச்சரவோ வர வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஐயாயிரம் முதல் ஏழாயிரம் வரை மக்கள் கூடுவ

துண்டு. ஆனால் அவ்வெண்ணிக்கை சில ஆண்டுகளிலேயே எழுபத்தைந்தாயிரமாக அதிகரித்தது என்றாலும் குறிப்பிட்டுக் கூறும் விதத்தில் எந்தவித தொத்து வியாதியோ, கலகமோ ஏற்பட்டதேயில்லை.

உருஸ், சந்தனக்கூடு விழா தொடங்குவதற்கு காரணமாக இருந்த கோபால்ராவ் குண்டிற்கு மற்றொரு எண்ணமும் உதித்தது. அதாவது சாயிபாபா வாழும் மசூதியை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதே அது. எனவே மசூதியை பழுதுபார்க்கும் எண்ணத்துடன் கற்களை சேகரித்து மசூதியின் பக்க வாட்டு சுவர்களையும், தாழ்வாரத்தையும் சரிசெய்தார்.

அதன்பின்பு சாயி தன் வழக்கமான ஆசனமான சாக்கு துணியை விட்டுவிட்டு தான் அமர் வதற்கென்று ஒரு சிறு ஆசனம் ஏற்படுத்திக் கொண்டார். 1911 ல் சபா மண்டபம் கடும் முயற்சியுடன் சரிசெய்யப் பட்டது.

மசூதிக்கு முன்னால் இருக்கும் திறந்த வெளியானது, சிறியதாகவும், வசதி குறைவானதாகவும் இருந்தது. அதை காகா சகேப் தீட்சித் அவர்கள் விசாலப்படுத்தி மேற்கூரை போட விரும்பினார். அதற்கென பெரும் செலவில் இரும்புத்தூண்கள், கம்பங்கள், துணிகள் முதலியவற்றை வரவழைத்து வேலையை ஆரம்பித்தனர்.

சாயி சாவடியில் உறங்கப்போன ஒருநாள் இரவில் அனைத்து அடியவர்களும் இணைந்து கடும் முயற்சி எடுத்து, சில கம்பங்களை ஊன்றினார்கள். ஆனால் மறுநாள் அதிகாலையில் பாபா சாவடியில் இருந்து திருப்பியதும் கடும் கோபாவேசம் அடைந்து எல்லாவற்றையும் பிடுங்கி எறிய முயற்சித்தார். பாபா மிகவும் உணர்ச்சி வயப்பட்டு ஒரு தூணை அசைத்து பிடுங்கி எறிய முற்பட்டபோது, அங்கு வந்த தாத்யாவை ஒரு கையில் பிடித்துக் கொண்டார்.

ஒரு கையில் தூணை அசைத்துக் கொண்டே மறுகையில் தாத்யாவின் கழுத்தை பிடித்து இழுத்து அவரது முண்டாசை வலிய பறித்து அதை நெருப்புக் குண்டத்தில் தூக்கி எறிந்தார். அந்த நேரத்தில் பாபா கோபத்தின் உச்சியில் இருந்தார். அவரது கண்கள் நெருப்புத் துண்டங்களைப் போன்றிருந்தது. ஒருவருக்கும் அவரை நிமிர்ந்து பார்க்க தைரியமில்லை. எல்லோரும் பாபாவின் கோபத்திற்கு அஞ்சினர்.

பாபா தாத்யாவை விடாமலே தன் பையினில் கைகளை விட்டு ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அதையும் எரியும் துனியில் எரிந்தார். தாத்யா மிகவும் பயந்து போனார். பாபாவிடம் இருந்து தாத்யாவை காப்பாற்ற ஒருவருக்கும் துணிவில்லை.

சிறிது நேரம் கழித்து தொழுநோயாளி பாகோஜி சிந்தே சற்றே துணிவோடு பாபாவை நெருங்கினான். ஆனால் பாபா அவனை கால்களால் எட்டிமிதித்து தள்ளிவிட்டார். பிற்பாடு வந்த



மாதவராவ் வை பாபா கற்களால் தாக்கினார்.

ஆயினும் சிறிது நேரத்தில் பாபாவின் கோபம் தணிந்தது. சாந்த சொரூபியாக மாறிய பாபா தனது ஆசனத்தில் சென்று அமர்ந் தார். பிறகு அங்கிருந்த ஒருவரைக் அழைத்து அவரிடம் பணம் கொடுத்து துணிக்கடைக்குச் சென்று நல்ல பூ வேலைப்பாடுகள் நிறைந்த தலைப்பாகையை வாங்கி வரச்செய்து, தாத்யாவிற்கு சிறப் பான கவுரவம் செய்வதைப்போன்று தாமே அவரது தலையில் கட்டி விட்டார்.

பாபாவின் இவ்வினோதக் குணத்தைக் கண்ட மக்களும், நானும் ஆச்சர்யத்தால் தாக்கப்பட்டோம். அவ்வளவு வேகமாக பாபாவை கோபமடையச் செய்தது எது? தாத்யா பாட்டீலுக்கு உதை கொடுக் கும்படிசெய்ததுஎது? அவரதுகோபம் அடுத்த விநாடியே தணிந்தது எப்படி? என்பதை எங்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

பெரும்பாலான நேரங்களில் பாபா அமைதியாகவும், மவுன மாகவும் இருந்தார். இனிமையான விசயங்களை அன்புடன் பேசினார். சம்பந்தமே இல்லாமல் திடீரென கோபாவேசம் அடைந்தார். நான் இங்கு வந்ததில் இருந்து இந்த குறுகிய காலகட்டத்தில் இதைப் போன்று நிறைய சம்பவங்கள் நடந்திருக்கின்றது. அதில் எதை கூறுவது, எதை விடுவது என்றே எனக்குத் தெரியவில்லை.

எனவே அதை விடுத்து சாயி பாபாவிடம் நான் நேரில் பார்த்து வியந்த வேறு சில நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கின் றேன். பாபா எல்லா விதமான யோகப் பயிற்சிகளையும் தெரிந்து வைத்திருந் தார் என்றே தோன்றுகின்றது. 22 அடி நீளமுள்ள மிக மெல்லிய துணியை விழுங்கி வயிற்றை சுத்தம் செய்யும் "தவ்தி" என்ற யோகப்ப யிற்சி முதல் தன் உடல் பாகங்களை தனித்தனியாகப் பிரித்து பின்பு சேர்க்கும் "கண்ட யோகம்," சமாதி யோகம் என பல யோகங்கள் கைவரப் பெற்றவராக இருந்தார்.

அவரை ஒரு இந்து என்று கருதினால், அவர் ஒரு யவனரைப் போன்று தோற்றமளித்தார். யவனர் என்று கருதினால், இந்துவாக தோற்றமளித்தார். அவர் ஒரு இந்துவா, முகம்மதியரா என்று ஒருவராலும் அறியமுடியவில்லை. இருவரின் மத விழாக்களை மசூதியில் சகல மரியாதையுடன் நடத்த அனுமதித்தார்

அவரை நாம் இந்து என்று நினைத்தால் அவர் தன் வாழ்நாள் முழுவதும் மசூதியில் வாழ்ந்தார். முகம்மதியர் என்று நினைத்தால், மசூதியை "துவாரகாமாயி" என்று

அழைத்தார். எனவே அவர் இந்துவா, இஸ்லாமியரா என்பதை ஒருவரும் நிச்சயமாக புரிந்து கொள்ள இயலாததாக இருந்தது.

அதில் மிக முக்கியமாக பாபா, அவர் தன் வாழ்நாளில் இதைப் பற்றி ஒரு போதும் எந்தவித கருத்தையும் வெளிப்படுத்தியதாக தெரியவில்லை.

அதில் ஒன்றும் அதிசயம் இல்லை. ஏனெனில் அகங்காரத் தையும், உடல் உணர்வையும் ஒழிப்பதன்மூலம் பரமாத்மாவிடம் முழுமையாக சரணடைந்து ஒன்றி விடுபவருக்கு சாதி மதம் இனம் தேசம் குறித்து கருத்து சொல்வதற்கு ஒன்றுமில்லை அல்லவா?

சாயிபாபா அத்தகைய தனித் தன்மை வாய்ந்த வியத்தகு தெய்வப்பிறவி ஆவார். ஏதோ முன் பிறவிகளில் செய்த பூர்வ புண்ணியத்தினாலேயே நான் அவரின் பாதத்தடியில் அமரும் பாக்கியத்தினைப் பெற்றேன். அந்த ஆனந்தத்தை நான் வார்த்தைகளில் விவரிக்க இயலாதவனாக இருக்கின்றேன்.

உண்மையில் சாயிபாபா சுத்த ஆனந்தமும், உணர்வும் ஆவார். அவரின் உயர்வையும் தனித்தன்மையையும் எவராலும் விளக்க இயலாது. முக்தி பெற வேண்டும் என்ற ஆர்வம் உள்ள பல சாதுக்களும், சாதகர்களும் பல மக்களும் பாபாவிடம் வந்தனர். பாபா அவர்களுடன் சகஜமாக நடந்தார், பேசினார், சிரித்தார், எப்போதும் தன் நாவினால் “அல்லா மாலிக்” என உச்சரித்தார்.

அவர் விவாதத்தையோ, கலகத்தையோ விரும்பியதில்லை. அவர் சில நேரங்களில் கடுமை யாக இருந்தாலும் எப்போதும் அமைதியாகவும், கட்டுப்பாட்டு டனும் இருந்தார். எப்பொழுதும் வேதாந்தத்தைப் போதித்தார். கடைசிவரை பாபா யார் என்பது ஒருவருக்கும் தெரியாது. அரசர்களும், ஏழைகளும் அவர்



முன் சமமாக நடத்தப்பட்டனர். அனைவருடைய ஆழ்ந்த ரகசியங் களையும் அவர் அறிவார்.

அதை அவர் அவரின் மொழி யாக வெளிப்படுத்தியபோது அனைவரும் வியந்தனர். சர்வ ஞானங்களின் கருவூலம் அவரே! எனினும் எதுவும் அறியாதவர் போல் நடித்தார். புகழை அவர் ஒரு போதும் விரும்புவதில்லை. அவர் மானுட உருவத்தில் இருந்தாலும் அவரது செய்கைகள் கடவுள் தன்மையை எடுத்துக்காட்டியது.

எனவே மக்களும் அவரது அடியவர்களும் அவரை பரமாத்மா என்றே நம்புகின்றோம்.

சீரடியில் உள்ள அனைத்து ஆலயங்களையும் தாத்யா மூலம் பழுது பார்க்கச்செய்தார் பாபா. அவரது தர்மம் குறிப்பிடப் பட வேண்டியது. மக்களிடம் இருந்து தட்சணையாக அவர் வாங்கிய பணம் முழுவதும் மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இது தூய தர்மப்பணம் என்றும், அதை உபயோகமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பாபா விரும்பினார். அதை தர்மம் பெற்றவர்களிடம், இந்தப் பணத்தை தின்று கழித்துவிடாதீர்கள். உபயோகமாக செலவழியுங்கள் என்று கூறுவார்.

பாபாவின் தரிசனத்திற்கு வெகுதூரத்தில் இருந்தும் மக்கள் சாரைசாரையாக வரத் தொடங்கினர். அனைவரும் சாயி பாபாவிடம் ஏதாவது ஒரு விதத்தில் பலனடையத் தொடங்கினர். ஆகையால் அவரது புகழ் வெகுதூரத்திற்கு பரவத்தொடங்கி எல்லா திசைகளில் இருந்தும் யாத்திரீகர்கள் சீரடியை நோக்கி திரண்டனர்.

பாபா எப்போதும் துனி அருகிலேயே அமர்ந்திருந்தார். அங்கு அவர் எப்போதும் தியானத் திலேயே அமர்ந்திருந்தார். சில நேரங்களில் குளித்தும், சில நேரங் களில் குளிக்காமலும் இருந்தார். தலையில் ஒரு டர்பனும், இடுப்பில் வேஷ்டியும் மேலே நீண்ட சட்டையும் அணிந்திருந்தார். இதுவே அவரது உடையாகும்.

சீரடி கிராமத்திற்கு அவர் வந்த காலத்தில் அனைவருக்கும் வைத்தியம் செய்தார். அவர் வைத்தியம் செய்யும் விதத்தை ஒரு சம்பவத்தின் மூலம் நாம் அறியலாம். ஒரு மனிதனுக்கு கண்கள் இரண்டும் சிவந்து வீங்கி இருந்தது. இம்மாதிரி வியாதிகளுக்கு மருத்துவர்கள் மிகவும் கவனமாக சொட்டு மருந்துகளை இடுவார்கள்.

சீரடியில் வைத்தியர் இல்லாத தினால் அவரை பாபாவிடம் அழைத்து வந்தனர். பாபாவின் வைத்தியமோ மிகவும் வித்தியாசமானது. தனித்துவ மானது. நோயாளியின் கண்களில் சலவை துணியில் குறியிடப் பயன்படும் ஒருவகை பசையை அவனது கண்களில் அப்பி கண்களைச்சுற்றி துணியால் கட்டி அனுப்பிவிட்டார்.

மறுநாள் துணியை அவிழ்த்துப் பார்க்க என்ன ஆச்சர்யம். அவனது கண்களின் வீக்கம் வடிந்து சிகப்பு மாறியிருந்தது. அவனுக்கு கண்களில் நோய் இருந்த அடையாளமே இல்லாதிருந்தது. அவன் மகழ்ச்சியுடன் பாபாவிற்கு நன்றி செலுத்திப் போனான். சாதாரணமாக அந்தப் பசை கண்களை குருடாக்கிவிடும். ஆனால் பாபாவின் வைத்தியத்தில் அது நன்மையே செய்தது. அதுதான் பகவான் சாயிபாபா.

தொடரும்.

தொடர் - 17

திருவருள் தேடி

நமது சாய் அன்பர்களுக்கு வணக்கத்துடன் சுந்தர் சாய். "திருவருள் தேடி" சென்ற இதழில் நாம் அலுவலகம் திரும்பும் சமயம் ஒரு ஃப்ளாஷ் போன்ற எண்ணம் நம் மனதில் உதித்து புதிய உற்சாகத்தை அளித்தது என முடித்தோம். ஆம்... ஞாயிறு விடுமுறை முடிந்து நமது அலுவலகம் செல்ல இருக்கிறோம். திங்கட்கிழமை நமது சாய்பகவான் பிறந்தநாள் (Nov.23) என்ற நினைவு மிகவும் சந்தோஷமான ஒரு மனநிலையை உருவாக்கியது.

நாம் உடனே மனதளவில் திட்ட மிட்டு ஒரு கிலோ சாக்லேட் வாங்கிக் கொண்டு 'சாய்ராம்' படத்தின் முன் வைத்து பிரார்த்தனை செய்து பிரசாதமாக அலுவலக நண்பர்களுக்கு கொடுக்கலாம் என முடிவு செய்தோம். அந்த வெளிநாட்டு நண்பர்கள் சத்ய சாய் பகவானைப் பற்றிக் கேட்டால், ஆன்மீக விஷயங்கள் அவர் களுக்குப் புரியும்படி விளக்க வேண்டுமே! நமக்கு அந்த அளவு ரஷ்ய மொழியில் சொல்லத் தெரியாதே என்றெல்லாம் ஒரு குழப்பமான தயக்கம் உண்டானது.

அந்த மனநிலையோடு திங்கட் கிழமை திட்டமிட்டபடி, நமது அலுவலகத்தில் நுழைய காரிலி ருந்து சாக்லேட் பிரசாதத்துடன் நான் இறங்கும் போதே என் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒரு ரஷ்ய நண்பர் என்னிடம் ஓடி வருகிறார். அவர் சொன்னார் "கஸ்பதீன் (மரியாதைக்குரியவரே) நீங்கள் உங்கள் சட்டைப் பையில் வைத்திருப்பீரே! அந்த மகானுடைய பிறந்தநாள் இன்று" என்று சொல்லி நம்மை வார்த்தையில் விவரிக்கமுடியாத வியப்பில் மூழ்கடித்தார்.

நான் சுதாரித்துக் கொண்டு 'ஆம் இந்தாருங்கள் சாக்லேட் என்று முதலில் அவருக்கு கொடுத்து விட்டு, அவருடன் மேலும் பேச விரும்புவதாக சொல்லிவிட்டு எனது ஆரம்ப வேலைகளை முடித்துக்கொண்டு அவரிடம் சென்று தங்களுக்கு இந்த விஷயம் எப்படித் தெரியும் என்று கேட்டேன்?



அவருடைய தாய் வழி உறவினர் ஒருவர் சென்னதாகவும், அவர் அமெரிக்காவில் இன்டீரியர் டிசைனராக வேலை செய்ததாகவும் வேலை நிமித்தமாக அங்கு

சுந்தர் சாய்



ஒரு இந்தியர் வீட்டிற்குச் சென்ற பொழுது அங்கு அவர் வீட்டில் உள்ள எல்லா அறைகளிலும் ஸ்வாமியின் திருவுருவ படத்தைக் கண்டு வியந்து இது யார் உங்கள் தந்தையா? பார்க்கும் இடமெல் லாம் அவர் படங்களையே மாட்டி வைத்திருக்கிறீர்களே! என வியந்தாரம்.

அப்பொழுது அந்த இந்திய நண்பர் சத்ய சாய் பகவானைப் பற்றியும் அவர் மீதுள்ள அளவிலா அன்பையும், அவருக்கு கிட்டிய இறை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார் என தெரி வித்தார். இவரோ இஸ்லாமியர் ஒரு ஹிந்து வாடிக்கையாளர் பகிர்ந்த விஷயங்களை அவரது ஆழ்மனதில் ஏதோ ஒரு தாக்கத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

தனக்குக் கிடைத்த டிஸைன் வேலையை திருப்திகரமாக முடித்த அந்த இஸ்லாமியர், பின் நாட்களில் அந்த அலுவலகத்தில் அமர்ந்து ஏதோ ஒரு மர வேலையை செய்யத் தொடங்கி ஒரு இயற்கை

காட்சியை வடிவமைக்க எண்ணி ஆரம்பித்தாராம். அந்த நேரத்தில் தன்னுடைய தோள்களின் சமீபத்தில் யாரோ நிற்பதாக உணர ஆரம்பித்திருக்கிறார்.

தன்னுடைய சொந்த உணர்வின்றி அவரது கைகள் தானாகவே இயங்கத் தொடங்கி அந்த வேலை முடிந்த பொழுது ஒரு அருமையான உயிரோட்டமுள்ள சத்ய சாய் பகவான் உருவத்துடன் அது முடிவடைந்திருக்கிறது. அதைக் கண்டு அவரே வியந்து போனாராம். ஆனால் அவருக்கென்று ஸ்வாமி மீது ஒரு தனிப்பட்ட பக்தியெல்லாம் இல்லையென அறிந்தேன், என்றாலும் காரியங்களை யார் நடத்துகிறாரோ அவர் சங்கல்பம் தான் நிறைவேறும். மேலும் அதற்கென்ற நபர்களை தெரிந்தெடுப்பதும் அவர்தானே!

ஒரு காலகட்டத்தில் அந்த இஸ்லாமியர் தன் தாய்நாடு திரும்ப முடிவுசெய்து கிளம்பும் சமயம் மரவேலைப்பாட்டில் உருவான அந்த சாய் உருவத்தை விற்று விட முடிவு செய்து இந்திய அன்பரிடம் விசாரிக்க, நமது இந்தியர் அவரிடம் நீங்கள் யாருக்கும் இதை விற்கக் கூடாது என்று உறுதியாக வலியுறுத்தி அதை அவரே வைத்துக் கொள்ளப் பணித்திருக்கிறார்.

வேறு வழியின்றி தன்னுடைய சொந்தப் பொருட்களுடன் பாபாவின் வேலைப்பாட்டையும் கொண்டு வந்த அவர் தனது உறவினரான எமது அலுவலக நண்பரிடம் தெரிவிக்க அவர் நம்மிடம் பகிர்ந்து நம்மை உற்சாகப்படுத்தினார்.

சென்ற மாத இதழில் எனது எண்ண ஓட்டங்கள், அலுவலகத்தில் நிலவிய இறுக்கமான திருப்பங்கள், அதிகார வர்க்கத்தில் நிலவிய ஆரோக்கியமற்ற போட்டி நில வரங்களை பகிர்ந்து கொண்டோம் அல்லவா?

எனவே அந்த இறுக்கமான சூழ்நிலையிலிருந்து நம்மை விடுவிக்க நம்முடனே பயணம் செய்து நம்மை ஒவ்வொரு நொடியிலும் கண்காணிததுக் காத்து ரக்ஷிக்கும் உத்தரவாதம் தான் நமது சாய் பகவானின் ஸ்பெஷாலிட்டி. அத்துடன் அவரை நாம் மட்டுமே அல்லது நம் நாட்டவர் மட்டுமே அறிவோம் என குறுகிய மனப்பான்மையுடன் சிந்திப்பதை மாற்றி அவரருளின் வியாபகத் தன்மை உலகளாவியது என அணித்தரமாக நமக்கு உணர்த்திய பகவானின் லீலா வினோதம் மிகப்பெரிய ஆன்மீகப் பாடம்.

இத்தகைய அனுபவங்களே நம்மை உருவாக்கிய, செதுக்கிய உளி என இன்னாளில் உணர்கிறேன் சாய்ராம். நன்றிகள் என்றென்றும் ஸ்வாமியின் திருப்பாதங்களை அர்ச்சிக்கட்டும். எங்கும், எப்பொழுதும், எதிலும், எல்லோருக்குமாக விளங்கும் சாய்பகவானை தெரிந்து, உணர்ந்து, தெளிவதே அவரது திருவருள் சங்கல்பமே.

இந்த விவரங்களையெல்லாம்

முழுமையாக மிகப்பெரிய ஆச்சரியத்துடன் அறிந்த நமது ஆர்வத்தில் நான் அவரிடம் ஒரு வேண்டுகோள் வைத்தேன். அந்த சாய்பகவானின் வடிவமைப்பை நான் காண மிகவும் ஆர்வமாக இருப்பதாக உணர்ச்சிப் பெருக்கு டன் நான் வேண்டியதை உணர்ந் தார் என் அலுவலக நண்பர்.

உடனே அவரும் தன் உற வினரைத் தொடர்பு கொண்டு என் விருப்பத்தைத் தெரிவிக்க நமக்கு ஓர் அடுத்த தொடர் அனுபவம்



காத்திருந்தது. அவர் சொன்னது இன்று ஸ்வாமி பிறந்தநாளை முன்னிட்டு ஓர் பக்தையின் இல்லத்தில் பிரார்த்தனை கூட்டம் ஏற்பாடாகியிருந்ததால் அங்கு ஸ்வாமியின் வடிவத்தைக் கொண்டு செல்லும் எண்ணம் இருப்பதாக சொன்னார். உடனே நமது ஆர்வம் மிகவும் தூண்டப்பட்டது.

ஒரே நேரத்தில் எல்லாம் கைகூடி வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என யோசிக்க, நானும் அந்த கூட்டத்திற்கு வரலாமா என நான் வேண்ட அவரும் உடனே சம்மதித்து நாங்கள் சந்திக்க வேண்டிய நேரம், இடம் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். ஒரு இனம் புரியாத மகிழ்ச்சியில் நான் மூழ்கடிக்கப்பட்டேன் . அடிக்கடி நேரத்தை, மணித்துளிகளின் நகர்வை கவனிப்பதிலேயே மும்முரமாய் இருந்தேன்.

இதற்கிடையில் என் கார் டிரைவரிடமும் விஷயத்தை தெளிவித்து அவர் கூறிய மெட்ரோ ஸ்டேஷன், சந்திக்க வேண்டிய நேரம் அவற்றை உறுதி செய்து போக்குவரத்து நெரிசல் இவற்றை உத்தே சித்து கிளம்ப வேண்டிய நேரத்தில் வேறு வேலை களை ஒதுக்கி வைத்து சரியாக புறப்பட வேண்டும் என சொன்னேன். நாங்கள் சந்திக்க வேண்டிய நேரம் மாலை 5 மணி.

நமது கர்மா அதன் வேலையை செய்ய ஆரம்பித்தது. சுமார் மதியம் 1 மணியளவில் கருமேகங்கள் திரண்டு ஊர் முழுவதுமே இருண்டு இரவு போல் காட்சியளிக்க மனதில் ஒரு பயம் தொற்றிக் கொண்டது. என்னுடைய அனுபவத்தில் அதுபோன்ற ஒரு இருண்ட மழை மேகங்களை அந்த நாட்டில் நான் பார்த்ததே இல்லை என்றளவுக்கு ஒரு பெரும் இருட்டடிப்பு.

அரை மணி நேரத்தில் மழை கொட்டத் தொடங்கியது. இடைவெளியின்றி பெரும்

மழை, போக்குவரவு எல்லாமே ஸ்தம்பிக்கும் அளவிற்கு பெய்த மழையினால் என் கண்களி னின்றும் மழைத் துளியாய் கண்ணீர் வருவதைக் கவனித்த என் டிரைவர், என்னிடம் மிஸ்டர் சுந்தர் கவலைப்படாதீர்கள் புயல், வெள்ளமே வந்தாலும் உங்களை சரியான நேரத்தில் அவரை சந்திக்க அழைத்துச் செல்ல வேண்டியது என் பொறுப்பு என்று உறுதி கூறி நம்பிக்கை ஊட்டினார்.

இருந்தாலும் மழையின் தீவிரம் நேரம் ஆக ஆக வலுத்துக் கொண்டே போனதில் ஒரு ஏமாற்றமடையும் மனநிலை கவலைக் குள்ளாக்கியது. இறைவனிடம் முறையிடுவதைத் தவிர வேறு வழியொன்றும் தெரியவில்லை.

ஷீரடி சாய் சத்சரிதத்தில் வரும் நிகழ்வைப் போன்று ஓர் உரத்த கட்டளை மேலிடத்தில் இருந்து வந்ததோ என எண்ணும் வகையில் சரியாக சுமார் 4 மணியளவில் மேகமூட்டம் கரைந்து மழை சிறு தூறலாக மாறி வழிவிட சரியாக 5 மணியளவில் நமது இஸ்லாமிய நண்பரை சந்தித்து ஆரத்தழுவிக் கொண்டு குசலம் விசாரித்தேன்.

சத்ய சாய் தரிசனமும் கிடைத்து பெருமகிழ்ச்சியில் திளைத்தேன். பாபாவை எங்களது காரில் அமர வைத்துவிட்டு, பூஜைக்கு வேண்டிய நெய்வேத்யம் மற்றும் மலர்கள் வாங்க அருகிலிருந்த கடைக்குச் சென்று வேண்டிய இனிப்புகள், மலர்களை வாங்கி திரும்பினோம். நான் எனது டிரைவரிடம் பாபா வந்து தங்கள் காரில் அமர்ந்து ஆசிர்வாதமாக செய்திருப்பதால் அவருடைய மனதில் உள்ள கோரிக்கை நிறைவேறும் என உறுதியளித்தேன்.

அவரும் மகிழ்வுடனும் நம்பிக்கையுடனும் என்னைப் பார்த்து நன்றி கூறும் விதமாய் புன்முறுவல் செய்தார். பின்வரும் நாட்களில் அது நிறைவேறியது அவர் இந்த காரை விற்றுவிட்டு ஒரு புது கார் வாங்க வழிபிறக்க வேண்டியிருந்தார். அதுவும் நன்றாக நிறைவேறியது. எனது டிரைவரும் சாய் பகவானுக்கு நன்றியுடன் வணக்கம் தெரிவித்தார்.

நாங்களும், மூவரும் சத்ய சாய் பகவானின் பிறந்தநாள் பிரார்த்தனை நடைபெறும் சாய் பக்தையின் குடியிருப்புக்கு வந்து சேர்ந்தோம். மழை முழுவதுமாய் நின்றிருந்தது. சத்ய சாய் பகவானின் அபார கருணையை எண்ணி இதயப் பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தை இன்றளவும் தெரிவிக்க மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் அங்கு அரங்கேறிய அற்புதங்களை அடுத்த இதழில் தொடர்வோம். சாய் சொந்தங்கள் அனைவருக்கும் சுந்தர் சாயியின் இதயப் பூர்வமான தீபாவளி நல்வாழ்த்துக்கள். இல்லம் தோறும் தெய்வீக தீப ஒளி பெருகி மகிழ்ச்சி பொங்கட்டும்.

குரு வாழ்க! குருவே துணை!!

எல்லாம் சாயி!சாயியே எல்லாமும்!!

– தொடரும்.

SOUNDS GOOD

BOOK FOR EVENTS

LIGHT MUSIC ORCHESTRA



Wedding | Birthday | Corporate Get together Events



- Light Music
- Karaoke
- Instrumental Music
- DJ Music




www.soundzgood.in

95 66 16 76 80

saai_archana_vr

SOUNDSGOOD Musically the best

SoundsGood Music Group



யோகி ஸ்ரீராம் பாபா

அவர்கள் எழுதிய

அற்புதமான

ஆன்மீகத் அனுபவத்

தேடல்கள் நிறைந்த

"குருவைத்தேடி"

நூல் விற்பனையில்

உள்ளது. தேவைப்படுவோர்

தொடர்பு கொள்ளவும்.

விலை 400/-

(தபால் செலவு உட்பட)

G- PAY NO: 9941816692

SAI DHYANALAYA

சாய் தியானாலயா ஆத்மஞான பீடம்

- யோகி ஸ்ரீராம் பாபா

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் எமது பணிவான வணக்கங்கள். அனைவருக்கும் என் முதற்கண் தீப ஒளித் திருநாள் வாழ்த்துக்கள். நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் மிக விரைவில் தனது சொந்த இடத்தில் இயங்கும் என்ற உறுதியோடு பீடம் சார்பாக சில செய்திகளை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன்.

பீடம் அமைப்பது தொடர்பாக சில மாதங்களுக்கு முன்பாக பக்தர்களிடம் ஓர் அறிவிப்பை வெளியிட்டோம். ஒரு சில காரணங்களால் பீடம் அமைப்பது சம்பந்தமாக தீவிரமாக செயல்பட முடியவில்லை. ஆயினும் அநேக அன்பர்களும், சாயி பக்தர்களும் எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்தவண்ணம் இருக்கின்றீர்கள்.

பகவான் சாயிநாதரின் ஆசியோடு மிகவிரைவில் சபை அமைவதற்குண்டான இடம் தேர்ந்தெடுக்கப்படும். குறைந்த விலையில் அதிக அளவு இடம் தேவைப்படுவதால் இடம் தேர்ந்தெடுப்பதில் மட்டுமே எமக்கு காலதாமதம் ஏற்படுகின்றது. மற்றபடி எமது எண்ணங்கள் எப்போதும் எளிமையாக இருப்பதால் இடம் கிடைத்துவிட்டால், சபை அமைவதில் எந்த சிக்கலும் இருக்காது என்று உறுதியாக கூறிக் கொள்கின்றோம்.

சபை பிரமாண்டமான கட்டிடங்கள் ஏதுமின்றி எளிய குடில்களாகத்தான் அமையும் என்பதை ஏற்கனவே குறித்திருக்கின்றோம். ஆகவே தற்போதைய எங்களது தேவை இடம். பகவான் சாயிநாதரின் அருளால் மிகவிரைவில் அமையும் என்று நம்புகின்றோம்.

எனவே, சபை அமைப்பதற்குண்டா பொருளாதாரம் சேகரிப்பதில் தற்போது அதிக முயற்சி தேவைப்படுகின்றது. இதுவரை சபைக்கு என சாயி அன்பர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தொகை ரூ.106000 ரூபாய். இனி ஒவ்வொரு மாதமும் காணிக்கையாக கிடைக்கும் தொகை நமது இதழில் நடுப்பக்கத்தில் வெளியிடப்படும்.

சாயி அன்பர்களும், எமது சிஷ்ய கோடிகளும், சேவா தொண்டர்களும் பிரதிபலன் பாராது நமக்கென அமையவிருக்கும் சாய் தியானாலயா ஆத்ம ஞான சபைக்கு உங்களால் முடிந்த அளவிற்கு காணிக்கைகளை சேகரித்து வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கின்றேன்.

அமையவிருக்கும் ஆத்ம ஞான சபை “அண்டினோருக்கு அண்ணவளமும், வேண்டினோருக்கு ஞான வளமும்” என்ற கொள்கைப் பிடிப்போடு மக்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி செயல்படும்



என்பதை உறுதியோடு அறிவிக்கின்றோம்.

சென்றமாதத்தில் நமது அன்புச்சகோதரி முகலிவாக்கம் திருமதி. திலகாஷ்யாம் சுந்தர் அவர்கள் தமது லௌகீக பிரட்சனைகள் ஆயிரம் இருந்தும் தாம் ஏற்றுக்கொண்ட ஆன்மீக லட்சியப் பணிக்காக, சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைய இடம் வாங்குவதற்குண்டான நிதியை ஒரே மாதத்தில் ரூ.17000/ சேகரித்து குரு ஸ்ரீராம் அவர்களிடம் அளித்து மாபெரும் சாயி சேவை புரிந்துள்ளார்கள். அவரும் அவரது குடும்பத்தினரும் நீள் ஆயுள், நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று மனதார வாழ்த்துகின்றோம்.

இம்மாத காணிக்கை அளித்தவர்கள்:

திரு.ஆர். பாலசுப்பிரமணியன். சென்னை.ரூ.3001.
திருமதி.திலகம், முகலிவாக்கம்.ரூ.2000.
திருமதி.உமா கிருஷ்ணசாமி, நங்கநல்லூர்.ரூ.2000.
திரு.ஜெயக்குமார், சென்னை.ரூ.1501.
திருமதி.சாதனா, நங்கநல்லூர். ரூ.1001.
திருமதி. ரம்யா ரமேஷ்பாபு, சென்னை. ரூ.1001.
திருமதி.சாந்தா, சென்னை. ரூ.501.
திருமதி.அம்சவேணி, சென்னை. ரூ501.
திருமதி.சிவசங்கரி, சென்னை.ரூ.501.
திருமதி. ஷிரானி, சென்னை. ரூ.501.
திருமதி.கிருஷ்ணவேணி, சென்னை.ரூ.500.
திரு. ரோஹித், சென்னை. ரூ.500.
திரு. பி.எஸ். மணி, சென்னை.ரூ.500.
திரு. என். ஹரீஸ், சென்னை. ரூ.500.
திருமதி.வாசுகி, சென்னை, ரூ.500.
திருமதி.வடிவு சகோதரிகள்,பெரம்பலூர். ரூ.500.
திருமதி. கீதா, ஆவடி. ரூ. 500.
திரு. யேது, சென்னை.ரூ.250.
திரு.எஸ்.கோபிகிருஷ்ணன், தேனி. ரூ.200.
திரு.கோகுல்கிருஷ்ணா,சென்னை. ரூ200.
திருமதி.கலா, சென்னை. ரூ.200.
திருமதி.எஸ்.லதா, நங்கநல்லூர். ரூ.100.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
அற்புத ஆன்மீகப் பயிற்சி

ஆத்ம ஞானம்

(உன்னையே நீ அறிவாய்)

மானுட வாழ்வின் ஒட்டுமொத்த பிரச்சனைக்கும் ஒரே தீர்வு தன்னையறிதல்
வாய்ப்பேச்சில் ஒன்றுமில்லை, இணைந்திடுவீர் இக்கணமே!



- தீராத உடல் நோய், மன நோயில் இருந்து விடுதலை.
- ஆரோக்கியம், ஆனந்தம்,
- தொழில் வெற்றி,
- குடும்ப நிம்மதி,
- தெய்வீக அதிர்வுகள்.

விபரங்களுக்கு,

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்,

9/1A, பழனியப்பா 2 வது தெரு, அயனாவரம், சென்னை–23.

9941816692 , 8825831068



சாய் தியானாலயா
ஆத்ம ஞான பீடத்தின்
13வது சீரடி
புனித யாத்திரை

யோகி ஸ்ரீராம் பாபாவுடன்
ஆறு நாட்கள் ஓர் ஆனந்தப்
பயணம். வழிநெடுக சத்சங்கம்,
யோகா, தியானத்துடன்
மெய் ஞானப் பாதையில்
ஸ்ரீ சாயி தரிசனம்.

ஆறு நாட்கள். கட்டணம்: 6500/–

நாள்: 15.1.2025

(இரயிலில் உணவு தவிர்த்து
அனைத்து செலவுகளும் உட்பட)

விபரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும் **99418 16692, 88258 31068**



பல்லக்கு ஊர்வலம்

சீரடியில் நடக்கும் பல்லக்கு ஊர்வலம் புகழ் பெற்றது. இன்று எல்லா பாபா ஆலயங்களிலும் பல்லக்கு ஊர்வலம் நடக்கிறது. இதன் பின்னணியில் ஒரு வரலாறு உள்ளது. பாபா வாழ்ந்த துவாரகா மாயியில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் சாவடி இருக்கிறது. இரண்டே நடையில் சாவடிக்கு சென்றடைந்து விடலாம். சாவடி என்றால் பொது மக்கள் சந்தித்து கூடி பேசும் இடமாகும். அதாவது ஊர் சங்க கூட்டங்கள் அங்குதான் நடைபெறும்.

மேலும் வழிப்போக்கர்கள் தங்குவதற்கும் அந்த சாவடி பயன் படுத்தப்பட்டது. அந்த சாவடி மிகப்பெரிய கட்டிடம் அல்ல. இரண்டு அறைகள் ஒரு வராண்டா மாதிரியான சிறு அறை அமைப்பில் உள்ளன.

துவாரகாமாயி மசூதி பழுத டைந்த காரணத்தாலும், மண் கட்டிடம் என்பதால் மழை நேரத் தில் தண்ணீர் ஒழுகிய காரணத் தாலும், அங்கு தங்க முடியாத நிலை இருந்தது. மசூதி தரையும் மண் தரையாக இருந்ததால் மழை காலத்தில் அங்கு தரையில் தூங்க முடியாத நிலை காணப்பட்டது. பலத்த மழை பெய்யும் போது மசூதி உள்ளே தண்ணீர் தேங்கி விடும். பாபா நிற்க கூட இடம் இருக் காது. இதனால் பாபாவை அவரது பக்தர்கள் சாவடியில் வந்து தங்குமாறு கூறினார்கள். ஆனால் துவாரகாமாயில் இருந்து வெளியேற பாபாவுக்கு விருப்பம் இல்லை.

நீங்கள் அங்கு சென்று தங்கிக் கொள்ளுங்கள் நான் சாவடிக்கு வர மாட்டேன் என்றார்.

ஆனாலும் பாபா பக்தர்கள் விட வில்லை. பாபாவை வற்புறுத்தி சாவடிக்கு அழைத்து சென்று விட்டனர். இதையடுத்து பாபா சாவடி யில் இரவில் தங்கி ஓய்வு எடுக்கத் தொடங்கினார். ஒருநாள் சாவடியிலும், மறுநாள் துவாரகாமாயியிலும் தூங்கும் பழக்கத்தை பாபா ஏற்படுத்தினார். ஒரு அறையில் பாபாவும் மற்றொரு அறையில் பக்தர்களும் படுத்துத் தூங்கினார்கள்.

இதன் காரணமாக துவாரகா மாயிக்கு கிடைத்த அதே மகிமை, மதிப்பு, மரியாதை எல்லாம் சாவடிக்கும் கிடைத்தது. சாவ டிக்குள் வலது பக்க அறையில் பாபா தூங்கினார். பாபா தெய்வ மானதும், சீரடியில் அவர் பாதம் பட்ட இடங்கள் எல்லாம், எப்படி புண்ணிய பூமியாக மாறியதோ, அது போல சாவடியும் புனிதப் பகுதியாக மாறியது.

நாளடைவில் சாவடிக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்த காரணத்தால், அந்த சிறிய இடம் சீரமைத்து சற்று பெரிதாக்கப்பட்டது. பாபரே சின்ன சினிகர் என்ற பாபா பக்தர் தன் சொத்துக்களை எல்லாம் சீரடி தலத்துக்காக எழுதி வைத்து விட்டார். அந்த சொத்து வரு வாயில் இருந்து கிடைத்த பணம் மூலம் சாவடியில் பளிங்கு கற்கள் பதித்து அழகுபடுத்தி உள்ளனர்.

சாவடிக்குள் பாபா பயன் படுத்திய பலகை, நாற்காலி, சக்கர நாற்காலி மற்றும் பல்லக்கு வைக்கப்பட்டுள்ளன. பாபா தெய்வமானதும், அவரது உடல் கிடத்தப்பட்டிருந்த பலகையும், சாவடியில் வைக்கப்பட்டிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த பலகையை மியூசியத்துக்கு மாற்றி விட்டனர். சாவடியில் பாபாபடுத்து உறங்கிய அறைக்குள் செல்ல ஏனோ பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த காரணத்தால் சாவடிக் குள் ஆண்களும், பெண்களும் மொத்தமாக செல்ல முடியாது. சாவடியின் வலது பகுதியில் ஆண் களும் இடது பக்க பகுதியில் பெண் களும் மட்டுமே தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பாபா தூங்கிய வலது பக்க அறை பகுதியை மிக, மிக புனிதமான இடமாக கருதி பாதுகாத்து வருகிறார்கள். பாபாவுக்கு காலையிலும், மாலையிலும் அந்த அறையில் வைத்துதான் ஆரத்தி எடுக்கப்பட்டது. எனவே அந்த அறையில் பாபாவின் அருளாற்றல் மிகுந்து இருப்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.

ஆண்கள், பெண்கள் தரிசனத் துக்காக தனிதனியே பிரிக்கப் பட்டு உள்ள சாவடியில் இரு பாலரும் வணங்க பாபா படம் வைக்கப்பட்டு உள்ளது. பாபாவை வணங்கி முடித்ததும், பலர் அங்கு சில நிமிடங்கள் அமர்ந்து தியானம் செய்வது உண்டு.

உங்கள் வேண்டுதல்கள் உடனே



நிறைவேற வேண்டுமானால், சாவடியில் இந்த குறிப்பிட்ட இடத்தில் தியானம் இருப்பது நல்லது. பாபா உயிருடன் இருக்கும் போது, துவாரகாமாயியில் இருந்து சாவடிக்கு அவரை ஆட்டம், பாட்டம், கொண்டாட்டமாக மேள, தாளம் முழங்க அழைத்து செல்வார்கள். சில சமயம் பாபாவை வாணவேடிக்கை, பஜனை பாடல்கள் பாடியபடி அழைத்து செல்வார்கள்.

பாபா வளர்த்த சியாம் சுந்தர் என்னும் குதிரை அவர் படத்தை முதுகில் சுமந்து செல்லும். அதன் பின்னால் பாபா நடந்து செல்வார். அப்போது பட்டு துணியில் செய்யப்பட்ட பல வண்ண குடையை பாபாவுக்கு பிடித்து வருவார்கள்.

இந்த ஆடம்பரத்தை முதலில் பாபா மிகவும் வெறுத்தார். எவ்வ ளவோ கண்டித்துப் பார்த்தார். ஆனால் பாபா மீது கொண்ட அபரிதமான பாசம் காரண மாக பக்தர்கள் யாரும் தங்கள் பழக் கத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

ஒரு கட்டத்துக்குப் பிறகு பாபா வால் தன் பக்தர்கள் மேற் கொண்ட பட ஊர்வலத்தை நிறுத்த முடியவில்லை. இதன் காரணமாக துவாரகாமாயியில் இருந்து சாவடிக்கு பாபாவை பக்தர்கள் ஆட்டம், பாட்டத்துடன் அழைத்து செல்வது ஒரு சாம்பிர தாயமாகவே மாறிப் போனது.

சாவடியில் பாபா சுமார் 20 ஆண்டுகள் வசித்ததாக கணிக்கப் பட்டு உள்ளது. அதில் கடைசி 9 ஆண்டுகள் “சாவடி ஊர்வலம்“

எனும் ஊர்வலம் நடந்தது. அதாவது 1909ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ந்தேதி இந்த ஊர்வலம் பழக்கம் தொடங்கியது.இந்த பழக்கத்தை சாய்பாபாவின் பக்தர்கள் ஒருங்கிணைந்து உருவாக்கினார்கள்.

குறிப்பாக பாபாவின் தீவிர பக்தரான ராதாகிருஷ்ணமயி என்பவர் பாபாவை மகாராஜா போல நடத்தினார். மற்ற பக்தர்கள் அதை பின்பற்றத் தொடங்கினார்கள். தன்னை மகாராஜா போல நடத்துவதை முதலில் பாபா விரும்பவில்லை. ஆனால் உண்மையான பக்தர்களின் அன்புக்கு பாபா கட்டுப்பட வேண்டியதாகி விட்டது. இதனால் நாளடைவில் சீரடியில் சாவடி ஊர்வலம் புனித சடங்கு போல, அதே சமயத்தில் மிக, மிக கோலாகலமாக நடந்தது.

மசூதியில் இருந்து சாவடிக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் பாபா புறப்படும் முன்பு பக்தர்கள் அனைவரும் மசூதி அருகில் வாத்தியக் கருவிகளுடன் திரள்வார்கள்.

சிலர் தீவட்டிகளை ஏந்தி நிற்பார்கள். பாபாவின் பல்லக்கு அழகு படுத்தப்படும். ஊர்வலத்தின் முன் பகுதியில் செல்லும் சியாம் குதிரையும் அலங்கரிக்கப்படும்.

ஊர்வலத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாரான பிறகு பாபாவின் பக்தராக மட்டுமின்றி நண்பராகவும் திகழ்ந்த தாத்யா



பாட்டீல் பாபாவிடம் சென்று தயாராகும்படி கூறுவார். உடனே பாபா தனது கப்னி உடையை எடுத்து அணிந்து கொள்வார்.

புகை பிடிக்கும் மண் குழாயை எடுத்துக் கொண்டு புறப்படுவார். அவர் மீது பூவேலை பாடுகள் கொண்ட பூ சால்வை போடப்படும். மசூதியில் இருந்து பாபா வெளியில் வந்ததும் சங்குகள் முழங்கும். மேளதாளங்கள் இசைக்கப்படும். பக்தர்கள் பாபாவை சூழ்ந்து கொண்டு சாமரம் வீசுவார்கள். பாபாவை புகழும் கீர்த்தனைகளை ஆண்களும், பெண்களும் பாடுவார்கள்.

மசூதியில் இருந்து சாவடி வரை பாபா நடந்து செல்ல அலங்கார துணி விரிக்கப்பட்டிருக்கும். பாபா தனக்காக உருவாக்கப் பட்ட பல்லக்கில் ஏறுவதே இல்லை என்பதால், அதில் அவரது பாதுகைகள் வைக்கப் பட்டிருக்கும்.

பாபா சாவடி நோக்கி நடக்கத் தொடங்கியதும், பட்டாசுகள் வெடிக்கப்படும். வாண வேடிக்கைகளும், மத்தாப்புகளும் கண்கவர் வகையில் கொளுத்தப்படும்.

பாபாவின் இடது கையை தாத்யா பாட்டீல், வலது கையை மகல்சாபதி இருவரும் பிடித்து கொள்ள பாபா நடக்கத் தொடங்குவார். பக்தர் ஜோக்குடை பிடித்து வருவார். பாபாவுக்கு பின்னால் அணிவகுத்து வரும் பக்தர்கள், "ஓம் ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு சாயிநாத் மகாராஜ் கீ ஜெய் என்று கோஷமிடுவார்கள்.


உண்மையிலேயே ஒரு நாட்டின் மகா ராஜாவை அழைத்து செல்வது போல பாபாவை பக்தர்கள் ஆட்டமும், பாட்டமுமாக அழைத்து செல்வார்கள். அந்த சமயத்தில் பாபா சாகேப் தீட்சித், வண்ண மலர்களை பாபா மீது தூவியபடி வருவார். சாவடியை நெருங்கியதும் அனுமன் கோவில் தெரியும். அந்த இடத்தில் மட்டும் பாபா சிறிது நேரம் சென்று ஏதோ மந்திரங்களை முணுமுணுப்பார். கையை மேலும் கீழும் ஆட்டியபடி நிற்பார். பிறகு சாவடிக்கு செல்வார்.

பாபாவின் வருகையை எதிர் பார்த்து சாவடி அலங்கரிக்கப் பட்டு அனைத்து ஏற்பாடு களும் தயார் நிலையில் வைக்கப் பட்டிருக்கும். அங்குள்ள ஆசனத்தில் பாபா அமர்ந்ததும் அவருக்கு பக்தர்கள் கிரீடம் அணிவித்து பூ மாலைகளை சூடுவார்கள். பாபாவின் பாதங்கள் வெள்ளிப் பாத்திரத்தில் கொண்டு வரப்படும் தண்ணீர் மூலம் கழுவி பூஜிக்கப்படும். ஆனால் இதையெல்லாம் பாபா கண்டு கொள்ளவே மாட்டார். பக்தர்கள் திருப்திக்காக அமைதியாக இருப்பார்.

அனைத்து ஆட்டம், பாட்டம் முடிந்து,பக்தர்கள் புறப்பட்டுசென்ற தும், பாபா தாமே படுக்கையை சரி செய்து தூங்கச் சென்று விடுவார். 1918ம் ஆண்டு பாபா மகாசமாதி அடையும் வரை இந்த பழக்கம் தொடர்ந்து நடந்தது. பாபா தெய்வமான பிறகும், இந்த பழக்கம் நின்று விடவில்லை. பாபா படத்தை மலர்களால் அலங்கரித்து, பாபாவை புகழ்ந்து பாடும் பாடல்களை பாடியபடி சென்றனர்.

நாளடைவில் வியாழன் தோறும் இந்த பழக்கம் நடைமுறைக்கு வந்தது. இப்போதும் இந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்து பல்லக்குகள் கொண்டு வரப் பட்டு பல்லக்கு யாத்திரை நடத்தப்படுகிறது.

நீங்களும் சீரடி செல்லும்போது, தவறாமல் வியாழன் அன்று மாலை 6 மணிக்கு நடைபெறும் பல்லக்கு ஊர்வலத்தை கண்டு களியுங்கள்.



தொடர் - 40

அதிதேவதை

ஆயியால் செய்யப்படும் ஒவ்வொரு வேலைபாடுகளும் பார்ப்பவர் மனதைக் கவரும் வண்ணமாகவும், குருநாதரின் கீர்த்தி அவ்வளவு உயர்ந்தது எனக் கருதுவார்கள். மதிய வேலைதனில் விழா ஆரம்பிக்கும் முன்பாக அன்னை ஸ்ரீ கிருஷ்ணனே ஆன ஸ்ரீ சாயிநாதருக்கும் மிகவும் பிடித்த வெண்ணெய், சீடை, அவல், முறுக்கு, இனிப்பு வகை, பழங்கள் என எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தாள்.

அதேபோல் பாபாவின் திருமேனியை அலங்கரிக்கப் பட்டு மஞ்சள் பீதாம்பரம், திவ்யமான முத்துமணி மாலைகள், வாசனை திரவியம், மயிலிறகு போன்றவை எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டு பாபா லெண்டியிலிருந்து வருவதற்கு முன்பாகவே அனைத்தும் ஏற்பாடு ஆயின!

இராதாகிருஷ்ணமாயி மற்றும் அடியார்களின் பிரேம பாவத்தில் மயங்கியவரைப் போல பாபா லெண்டியிலிருந்து பக்தர்களின் ஜெய கோஷத்துடனும், அன்புட னும் மசூதிக்கு அழைத்து வரப் பட்டார். பாபாவின் திவ்ய முகமோ கிருஷ்ண ஜெயந்தியின் போது பேரொளியாய் ஜொலித்ததை யாவரும் கண்டு ஆனந்தப்பட்டனர்.

பிறகு பாபாவை நல்ல ஆசனம் ஒன்றில் எழுந்தருளச் செய்து ஆயியால் வழங்கப்பட்ட பட்டு வஸ்திரத்தினால் அலங்கரித்து முத்துமணி மாலையைச் சூட்டி, அழகிய வாசனை மிகுந்த பூமாலையைச் சூட்டி, பாபாவின் சிரஸில் மயிலிறகு சமர்பித்தனர்.

பாபாவோ ஆயியின் பிரேமையை அறிந்து அடியார்களின் மனதையும் சேவையையும் ஏற்று அமைதியின் வடிவமாய் காணப்பட்டார்.

துவாரகாமாயி சிதிலமடைந்து, குண்டும் குழியாய் இருந்தாலும் ஆயியின் அலங்காரத் தோற்றத்தினால் யாவும் மறைந்து போய் பாபா ஸ்ரீ கிருஷ்ண அலங்காரத்தில் ஜொலித்தார். பாபாவிற்கு தூப தீபங்களுடன் நெய்வேத்யமும் பிரேமையோடு சமர்பிக்கப்பட்டது. எல்லாருடைய மனதிலும் ஆனந்தம் குடிகொண்டு முகமலர்ச்சியோடு அடியார்கள் காணப்பட்டனர்.

இதன் இடையில் ஸ்ரீ கிருஷ்ணனே மசூதியில் ஸ்ரீ சாயிநாதராக வீற்றிருக்கையில் ஆயியின் மனமும் ஆனந்த மழையில் நனைந்து தன்னையே மறந்து, ராதையின் ரூபமாக ஜனாபாய், மீராபாய், கானோபாத்ரா, ஸ்ரீ ஆண்டாள் என யாவரும் ஒன்று வடிவமாய் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியமான ஜெயதேவரின் அஷ்டபதி, மீராபாயின் அற்புத கீர்த்தனைகள், ஜனாபாயின் கீர்த்தனைகள் என யாவற்றையும் சாயிகிருஷ்ணனின் முன்பாக பாடி, ஆடி மகிழ்ந்து தன்னிலை மறந்து பிரேம பாவத்தின் உச்சத்தின் நிலையில் இருந்து பாடினாள், ஆடினாள்.

பாபாவின் அடியார்களின் மனமோ நாம் ஷீரடியில் இருக்கிறோமா இல்லை பிருந்தாவனத்தில் இருக்கிறோமா என சிந்தை கொள்ளும் அளவிற்கு ஆயியின் பிரேம பக்தியின் சக்தியானது வியாபித்து நின்றது ஷீரடியில். ஆயி மகாராஷ்டிரா மக்களால் மிகவும் போற்றப்படும் "மாவுலி ஞானதேவரால்" அருளப்பட்ட "ஸ்ரீ ஹரிபாட்" எனும் 28 கீர்த்தனைகளைப் பாட ஆரம்பித்தாள்.

இராதாகிருஷ்ணமாயியின் பிரேமபக்தி நிறைந்த தெய்வீக குரலின் ஓசையில் அடியவர்கள் தன்னையே மறந்தனர். ஆயியோடு சேர்ந்து யாவரும் ஸ்ரீஹரிநாமம் ஸ்ரீகிருஷ்ண நாமத்தைப் பாடி ஆனந்த மனோபாவதில் இருந்தனர். ஆயிக்கு சாய்நாதனான கிருஷ்ணனைத் தவிர வேறு எவரும் அவளது திருஷ்டியில் தெரியவில்லை. சாயிநாதன் ஆயிக்கு ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் தந்து பிரபஞ்சமே பகவானாக கண்டுகொண்டாள்.

ஆனந்தத்தில் மேலும் "ஞான தேவராகவும்" ஆயிக்கு சாயிநாதர் காட்சி தந்த ஆனந்தத்தில் ஆயி பிரேம நர்த்தனம் புரிந்து எல்லோரையும் ஸ்ரீ சாயிநாத் மகராஜ்க்கு ஜெய் எனவும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ஜெய் எனவும் ஜெய கோஷம் செய்ய தூண்டிவிட்டு நாமகோஷத்தை செய்ய வைத்தாள். ஸ்ரீ சாயிநாதரோ தன்னையே மறந்தவராய் பக்தர்களின் பக்தியைக் கண்டு ஆனந்தப்பட்டு ஸ்ரீ கிருஷ்ண ரூபமாய் அமர்ந்து இருந்தார்.

ஆயியின் கீர்த்தனம் மற்றும் அடியார்களின் ஆரவாரம் ஜெய கோஷம் முடிவு பெற்றது. பிறகு சாயிநாதருக்கான கிருஷ்ண பூஜையும், ஆரத்தி வழிபாடும்

சிறப்பாக நடந்தது. அடியார்களின் மனது பாபாவின் மீதே மையல் கொண்டபடி இருந்தது. விழா முடியும் தருவாயில் பாபாவின் மீது யாவரும் கண்திருஷ்டி பட்டிருக்கும் ஆகையால் ஆயி அடியவர்களை தூண்டிவிட்டு பாபாவிற்கு திருஷ்டி கழித்தாள். கோபால கண்ணனே ஆன சாயிநாதரின் கரத்தால் அடியார்கள் கிருஷ்ண பிரசாரமும், உதி பிரசாதமும் வாங்கி இல்லத்திற்கு



சென்றார்கள். என்ன பாக்யம் உண்மையில் நம் பாபா ஸ்ரீகிருஷ்ண பகவான் ஆனார்.

ஆயினும் எத்தனை பேரால் அந்த உண்மையை உணர்ந்து கொள்ள முடிந்தது. அப்படியாக பாபாவை கிருஷ்ணனாகவே நினைத்து வணங்குவது என்பது சாதாரணமான காரியமா என்ன? ஆனால், ஆயி தன் கிருஷ்ண பக்தியை ஷீரடியில் விதைத்ததன் மூலமே யாவரும் பாபாவை கிருஷ்ணனாக பாவிக்கும் பாவத்தைப் பெற்றனர்.

நமது ஆயியும் தன் பிருந்தாவனத்திற்குச் சென்று சாயி கிருஷ்ண லீலையில் தன்னை பூர்ணமாக சமர்பித்து பகவானை நினைத்து நினைத்து பாவ சமாதி நிலைக்குச் சென்றுவிடுவாள். ஆயியின் இந்நிலையைப் பலர் கண்டாலும் ஆயிக்கு என்னவோ ஆகிவிட்டது, என்றே கூறினர். ஆனால் ஆயியின் உன்னதமான மதுரமான பாவபக்தியை உணரவே இல்லை. இராதாகிருஷ்ணமாயியை உணர்ந்தோர் சிலரே. பிறகு ஆயி சாலாவில் ஏக்நாத பாகவதம் படித்தபடி ஸ்ரீ இராதாகிருஷ்ண பாவத்தில் திளைத்தும் சாயியோடு ஒன்றியும் இருப்பாள்.

இதுவே ஆயியின் பிரேம பாவபக்தியின் நிலையாகும் இனிதே ஷீரடியில் ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி விழாவும், ஆயியின் சங்கல்பத்தாலும், சாயியின் கிருபாபலத்தாலும் நிறைவேறியது. பிறகு பாபா சாவடிக்கோ, லெண்டிக்கோ செல்வது ஆயி அறிந்தால் மசூதிக்கு அடியார்களை அழைத்துச் சென்று சுத்தம் செய்வாள். பிறகு பாபா லெண்டியிலிருந்து மசூதிக்கு வருவதற்குள்ளாகவே பாபா திருவடிப்படும் இடத்தை பெருக்கி சுத்தம் செய்து விடுவாள். இராதாகிருஷ்ணமாயியின் குருபக்தியை, சாயியை ஸ்ரீ விட்டலாக பாவித்து செய்த பாவபக்தியை, பாபாவோடு ஒன்று கலந்து நிற்கும் அனன்யபக்தியை

மதிப்பிடவே இயலாது. அது எல்லைகள் அற்றது.

கடவுள் மனித உருவத்தில் தம்மை தெரிவித்துக்கொள்ளும் பெரிய அவதாரங்களே குருமார்கள். அவர்கள் நம்மைப் போன்ற சாதாரண மனிதனாக நினைக்காது, கடவுளாகவே பாவித்து போற்றி அடிப்பணிய வேண்டும். பழகிய யானையைக் கொண்டு புதிய யானையைப் பிடிப்பது போல, நம்மை போலவே மனித வடிவம் தாங்கி கடவுளே நம்மை உய்விக்க குருவடிவில் வந்ததாக பாவித்தல் வேண்டும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் போன்றோர் இல்லை என்றால் உலகில் அன்பு நெறி காணப்படுமா? ஒரு கட்டையில் நெருப்பு உள்ளது. அந்த நெருப்பினை (ஒளியை) வெளியே கொண்டுவர வேறு ஒரு கட்டை வேண்டும். வேறு ஒரு கட்டையுடன் உரசும்போது கட்டையிலிருக்கும் நெருப்பு வெளியே வருகிறது. அதைப் போல் நம் உள்ளே இருக்கும் ஆன்ம ஒளியை, வேறு மனித வடிவம் தாங்கிய குருவால் மட்டும் தான் வெளியே கொண்டு வரமுடியும். எளிமையாக கூறப்போனால் பசுவிடம் பால் பெறுவதற்கு கன்றுக்குட்டி அவசியமாதல் போல பகவானின் திருவருளைப் பெற வேண்டுமாயின் குருவருளை முதலில் பெறுவது அவசியமாகும் அல்லவா?

(தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

திருப்புகழ் தந்த "அருணகிரிநாதர்"

சைவம் தழைத்தோங்கிய தென்பகுதியாகிய தமிழ்நாட்டில் ஆதிகாலம் தொட்டு புகழோடு விளங்கிய வழிபாட்டு சமயங் களில் ஒன்று கௌமாரம். முருகப் பெருமானை பரம்பொரு ளாக போற்றி வழிபடும் வழிமுறைகளைக் கொண்டது. இன்று அவை எல்லாம் "இந்து" என்ற அடையாளத்துடன் ஒன்றாகிப்போனது.

அந்த வழியில் கௌமாரத்தை பின்பற்றிய ஒரு குருவாகவே வாழ்ந் தவர் அருணகிரிநாத சுவாமிகள்.

அருணகிரிநாதர் திருவண்ணா மலையில் வாழ்ந்து வந்தார். அருண கிரிநாதர் வாழ்க்கை சம்பந்தமாக ஆதாரபூர்வமான பதிவுகள் இல்லை. அவரது பிறப்பு, ஜாதி சம்பந்தமாக உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. எனவே நம்பத் தகுந்த ஆதாரங்களை மட்டும் தொகுத்திருக்கின்றோம்.

எது எப்படி இருந்தாலும் பல்வேறு நூல்களில் கூறப்படுவது போல அருளாளர் அருணகிரிநாதர் அடைந்த அருள், ஞானநிலை சாதாரணமானதல்ல என்பது மட்டும் உறுதி. அருளாளர் அருணகிரி நாதரின் போற்றத்தக்க வாழ்க்கை வரலாற்றை அகச்சான்று கள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் சுருக்கமாக பின்வருமாறு கூறலாம்.



அருணகிரிநாதரின் புனிதமான சமாதி மண்டபம். இங்கே அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்புறத்தில் அவருக்கு சிறிய கோயில் ஒன்று உள்ளது.

வடதேசத்திலிருந்து வந்து திருவண்ணாமலை அருகில் முல்லந்திரம் மற்றும் பிற கிராமங் களில் குடியமர்ந்த கௌட பிராமண குடும்பத்தில் பிறந்தவர் அருணகிரிநாதர். அவர் இளமைப் பருவத்திலிருந்தே தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளைக் கற்றுத் தேர்ந்திருந்தார்.

அவருக்கு திருமணமாகி மனைவி, குழந்தைகள் மற்றும் உறவினர்கள் இருந்தனர்.

ஒருவேளை அவருக்கு நற்கல்வி அளிக்க அவரது பெற்றோர்கள் திருவண்ணாமலைக்கு வந்து வசித்திருக்கலாம் அல்லது திருமண மான பிறகு ஜீவனம் நடத்துவதற்காக அவர் திருவண்ணாமலைக்கு வந்திருக்கலாம்.

அவருக்குத் திருமணம் ஆகி குழந்தைகள் இருந்தாலும் விதி வசத்தால் அவர் திருவண்ணா மலையில் விபச்சாரிகளின் மோக வலையில் சிக்கித் தவித்தார். சிற்றின்பச் சேற்றில் மூழ்கினார். விபச்சாரிகளை திருப்திப்படுத்த தன் செல்வம் முழுவதையும் இழந்தார். மேலும் கருமிகளைப் புகழ்ந்து பாடிப் பணம் பெற்று விபச்சாரிகளுக்கு கொடுத்தார். அவர்களுடன் கொண்ட தகாத உறவால் அவர் குணப்படுத்த முடியாத நோயினால் பாதிக்கப் பட்டார்.

உற்றார் உறவினரும் விபச் சாரிகளும் அவர் நிலை கண்டு ஏளனமாகச் சிரித்தனர். அனை வரும் அவரை வெறுத்து ஒதுக் கினர். காலம்தான் குணப் படுத்தும் மகத்தான சாதனம். அருணகிரி தனது செயலுக்காக வெட்கப்பட்டார். கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைத் தான் வீணாக்கி விட்டதற்காக வருந்தினார். வேதனைப்பட்டார்.

ஒரு முதியவர் அவரிடம் முருகப் பெருமானை வழிபடுவதிலும், தியானிப்பதிலும், அவரிடம் பிரார்த் தனை செய்வதிலும் நேரத்தைச் செலவிடுமாறு அறிவுரை கூறினார். அதன்படி கோவில் கோபுரத்தின்



அருகில் அமர்ந்து இறைவன் மீது மனதைச் செலுத்தி தியானித்தார்.

ஆயினும் மனம் அமைதி பெறவில்லை. இறுதியாக, தரம் தாழ்ந்த தனது வாழ்க்கையை முடித்துக்கொள்ளவும், தான் செய்த பாவத்துக்குப் பரிகாரம் தேடவும் அவர் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ள முடிவு செய்தார். கோவில் கோபுரத்தின் உச்சிக்கு ஏறிச் சென்றார். முருகனைப் பிரார்த்தித்தார். தற்கொலை செய்துகொள்ள கோவில் கோபுரத் திலிருந்து கீழே குதித்தார்.

அவர் பூமிக்கு அருகில் வரும் போது அவர் வணங்கும் முருகன் தனது அபார கருணையினால் அவரை தனது திருக்கரங்களில் தாங்கிப்பிடித்து காப்பாற்றினார். தனது வேல் கொண்டு அருண கிரியின் நாவில் "ஓம்" எனும் புனிதமான பிரணவ மந்திரத்தை எழுதினார். அவருக்கு ஒரு

ஜபமாலையைத் தந்தார். தனது புகழைப் பாடுமாறு அருளாணை பிறப்பித்தார்.

பாடுவதற்கு 'முத்தைத்தரு' என்று முதலடியும் எடுத்துக் கொடுத்தார். பாவியான அருணகிரி நொடிப் பொழுதில் இறைஞானம் பெற்ற பரமஞானியாக மாற்றம் பெற்றார். தீராத நோய் தீர்ந்து முழுமையான ஆரோக்கியமான உடல்நலம் பெற்றார். பல்வேறு தெய்வீக அனுபவங்களைப் பெற்றார். அவர் முகம் அருட் பொலிவுடன் பிரகாசித்தது.

கோவில் கோபுரத்தின் அடிவாரத்தில் அருணகிரியை முருகன் காப்பாற்றிய இடத்தில் முருகனுக்கு ஒரு கோவில் உள்ளது. அது "கோபுரத்து இளையனார் கோவில்" என்றழைக்கப்படுகின்றது. அருணகிரியார் வீடுவாசலற்ற துறவியானார். எப்பொழுதும் இறைவன் புகழைப் பாடும் பணியே பணியாய் மேற்கொண்டார்.

திருவண்ணாமலையில் கோவில் கொண்டிருக்கும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடினார். அவர் புகழ் திக்கெட்டும் பரவியது. அந்த தேசத்து மன்னன் பிரவுட தேவன் அருணகிரிநாதரைப் போற்றி வணங்கி அவர் பக்தராக மாறினார். அருணகிரியாரைக் காப்பாற்றியருளிய முருகனை மன்னன் தரிசிக்க விரும்பினார். அதற்காக அருணகிரியை வேண்டினார். அருணகிரியும் அதற்காகக் கூட்டிய ஒரு சபையில் 'அதலசேடநாராட' என்ற திருப்புகழ் பாடலைப்பாடி முருகப் பெருமானை காட்சி அளிக்கப் பிரார்த்தித்தார்.



சமாதி பீடம் (நெருங்கிய தோற்றம்)

அவ்வண்ணமே, முருகப் பெருமான் மன்னன் மற்றும் திரளாகக் கூடியிருந்த மக்கள்முன் ஒரு கம்பத்திலிருந்துத் தோன்றி, ஆடிடும் மயில் மீது ஏறிவந்து காட்சி தந்தார். மன்னன் பெருமகிழ்ச்சி அடைந்தான். மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

முருகன் கம்பத்திலிருந்து வெளிப்பட்டு காட்சியளித்த இடத்தில் முருகனுக்குக் கோயில் இருக்கிறது. அது "கம்பத்து இளையனார் கோவில்" என்று அழைக்கப்படுகின்றது. கர்ண பரம்பரைக் கதைகளில் கூறப்படுவதுபோல முருகனை தரிசித்ததால் மன்னன் கண் பார்வையை இழக்கவில்லை. மன்னன் கண்பார்வைபெற பாரிஜாத மலரைக் கொண்டுவர அருணகிரி தேவலோகம் செல்லவுமில்லை.

இந்த சம்பவத்துக்குப் பிறகு அருணகிரி திருத்தல யாத்திரை செய்தார். இந்தியா முழுவதும் உள்ள முருகன் திருக்கோவில்களையும் மற்ற கோவில்களையும் தரிசித்தார்.



அங்கு கோவில் கொண்டுள்ள முருகனை போற்றிப் புகழ்ந்து பாடினார். இந்த யாத்திரையில் அவருக்குப் பலவிதமான அனுபவங்களும் இறைவன் தரிசனமும் கிடைத்தன.

திருச்செந்தூரில் முருகன் குழந்தை வடிவில் வந்து நடன மாடி காட்சி அளித்தார். இந்தத் தலத்தில் அருணகிரிநாதர் வில்லிபுத்தூராருடன் இலக்கிய விவாதத்தில் ஈடுபட்டு, "கந்தர் அந்தாதி" பாடி, அவரை வென்றார். அதன்பின் கடல் கடந்து இலங்கை சென்றார். ஸ்ரீலங்காவில் அவர் அருக்கோணமலை மற்றும் கண்டி ஆகிய ஊர்களுக்குச் சென்று தரிசித்தார்.

அதன்பிறகு அவர் பிரசித்தி பெற்ற கதிர்காமம் சென்றார். பிறகு அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து அகத்திய முனிவர் தங்கித் தவம் செய்த பொதிகைமலை சென்றார். அங்கு, "இறைவா! நீ என்னை உன் அருகில் அழைத்துப் பெரிய தவசிகள் கூட்டத்தில் சேர்வாயாக என்று எனக்கு அருள் புரிந்து, வேல், மயில் ஆகிய சின்னங்களைப் பொறித்து அருள்வாயாக," என்று பிரார்த்தனை செய்தார்.

அங்கிருந்து திருத்துருத்தி என்னும் தலத்திற்குச் சென்றார். அங்கே முருகன் அருணகிரியின் கனவில் தோன்றி, அவரது தோள்களில் வேல் மற்றும் மயிலின் சின்னங்களைப் பதித்து "கந்தர் அனுபூதி" பாடல்களைப் பாட அருளாணை பிறப்பித்தார். அருணகிரி உடனடியாக கந்தர் அனுபூதிப் பாடல்களை திருத்துருத்தியிலேயே பாடியிருப்பார் என்றே தோன்றுகிறது,

திருத்தணிகையில் தங்கி, இறைவன் சித்தம் களிகூர ஆழ்நிலை தியானத்தில் ஈடுபட அருள் புரியுமாறும் அவர் பிராத்தனை

செய்தார். முருகன் அவரை திருத்தணிகைக்கு வருமாறு அழைத்தார். அதன்படி, அருணகிரி திருத்தணிகை சென்று சில ஆண்டுகள் தங்கி ஆழ்நிலை தியானத்தில் ஈடுபட்டார். கடும் தவம் செய்தார்.

அந்த வேளையில் அற்புதமான திருவகுப்புப் பாடல்களை இறைவன் உள்ளம் மகிழ்ச்சி அடையும் பொருட்டுப் பாடினார். எனவே, இவற்றில் விபச்சாரிகளின் காமக் களியாட்டங்கள் பற்றிய குறிப்புகள் முற்றிலும் இல்லை. மரணபயம் பற்றிய குறிப்பும் ஒரு சில பாடல்கள் தவிர மற்ற பாடல்களில் இல்லை. இறுதியாக, அவர் எங்கிருந்து தனது திருத்தல யாத்திரையைத் தொடங்கினாரோ அந்த சொந்த ஊரான திருவண்ணாமலைக்கு வந்தார்.

இந்த பாரத யாத்திரையின்போது அவர் 16000 திருப்புகழ் பாடல்களைப் பாடியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவற்றில் சுமார் 1300 பாடல்களே நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவர் யாத்திரையின் போது 'கந்தர் அனுபூதி', 'கந்தர் அந்தாதி', 'கந்தர் அலங்காரம்' மற்றும் பிற நூல்களையும் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் தனது நீண்ட யாத்திரையை நிறைவு செய்து திருவண்ணாமலைக்குத் திரும்பி வந்தபோது மன்னன் பிரவுட தேவன் உரிய மரியாதையுடன் வரவேற்றான். அருணகிரியார் தனது இறுதிக் காலத்தை தியானத்தில் தவத்தில் கழித்தார். நாளடைவில் இறைவனோடு இரண்டறக் கலந்து, அத்வைத நிலையாகிய சாயுஜ்ய நிலையை அடைந்தார்.

அவர் தனது பூத உடலை உதறித்தள்ளிய போது, தனக்கு இறைவனை தரிசிக்கும் வாய்ப்பை அருளித்தந்த அருணகிரி நாதருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மன்னன் பிரவுடதேவன், அவர் உடலை திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் மேலைப் பிராகாரத்தில் அடக்கம் செய்து, அத்துடன் அவருக்கு ஒரு சிறிய கோவிலும் அமைத்தான். அதில் அருணகிரிநாதரின் கல் விக்கிரஹத்தைப் பிரதிஷ்டை செய்து, அதற்கு தினசரி பூஜை செய்வதற்கும் ஏற்பாடு செய்தான். இந்தச் சமாதிக் கோவிலை இன்றும் நாம் காணலாம்.

இவ்வாறு அருணகிரிநாதர் போற்றத்தக்க இறைஞானம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார். மனிதசக்திக்கு அப்பாற்பட்ட அற்புதச் செயல்களை நிகழ்த்திக் காட்டினார். மக்களை சம்ஸார வாழ்க்கை எனும் மாயையிலிருந்து விடுவித்தார். அவர்கள் நிரந்தரமாக இறைவனைப் பற்றிய விழிப் புணர்வுடன் வாழ வழிகாட்டினார்.

அவர் இன்றும்கூட பக்தர்களுக்குத் ஆன்மீகப் பூரண நிலையை அடைய வழிகாட்டுகிறார். அருணகிரிநாதரின் அருளாசி நமக்கு என்றும் கிடைக்கட்டும். அனைத்து அருளாளர்கள் மற்றும் ரிஷி முனிவர்களின் அருளாசி மனிதகுலத்துக்கு என்றென்றைக்கும் கிடைக்கட்டும்.

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவசமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயம் உலகப் புகழ் பெறக் காரணமாக இருந்த, ஸ்ரீலஸ்ரீ திருவேற்காடு சுவாமி இராமதாஸ் அவர்களின் சீவபீடத்தை தரிசனம் செய்து அவரின் வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து கொள்வோம்!



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் திருவாரூர் ஸ்ரீ ஆண்டாள்புரம் சுவாமிகளின் சீவசமாதியை தரிசனம் செய்து அவரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து கொள்வோம் வாருங்கள்!



திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மணக்குடியில் பிறந்தார் சுவாமிகள். தந்தையார் பெயர் குப்புசாமி தேவர். சுவாமிகளுக்கு பெற்றோர் இட்ட பெயர் ராஜகோபால் என்பதாகும்.

இலங்கையில் ஆங்கில உயர் கல்வியை முடித்தார். கையொப்பம் ஆங்கிலத்தில் தான் போடுவார். இலங்கையில் உள்ள வவுனியா காட்டில் கடும் தவம் புரிந்து அங்குள்ள குருநாதர் ஒருவரின் கட்டளைப்படி தமிழ்நாட்டில் உள்ள திருவாரூர் வந்தடைந்தார். திருப்பூண்டி அருகிலுள்ள சிந்தாமணியில் உள்ள ஒரு திடலில் தங்கி, தன்னை நாடி வருகின்ற அன்பர்களுக்கு அருளாசிகள் வழங்கி வந்தார்கள்.

தான் வசிப்பதற்காக சிறு குடிலை அமைத்துக் கொண்டு, வெளிசத்திற்காக மெழுகுவர்த்தி ஏற்றி வைத்துக் கொள்வார். எங்கு சென்றாலும் கால்நடையாகவே சென்று அதே வழக்கமான இடத்திற்கு வந்தடைவார்கள்.

சுவாமிகள் சாலையில் சென்றால் வாகனங்கள்

வழிவிட்டு நின்றுவிடும். சீவராசிகளும் நின்று வழிவிடும். வெள்ளை ஆடை தான் அணிந்து கொள்வார். எங்கு சென்றாலும் காலணி போடாமல் செல்வார். அனைவரையும் வாடா, போடா என்று அன்போடு அழைப்பர், மாவட்ட கலெக்டர் உட்பட.



சுவாமிகள் கோயிலின் கருவறைக்குச் சென்றால், அங்குள்ள பூசாரிகள் மரியாதை நிமித்தமாக வெளியில் வந்து விடுவார்கள். சுவாமிகள் வாழும் காலத்தில் புகைப்படம் எடுக்க அனுமதி கொடுக்கவில்லை. ஏனெனில் "மனதில் நினைத்து வழிபடு நான் அங்கு இருப்பேன்" என சொல்வார்கள்.

இதை இவர் சொல்லியும் கேட்காமல் சதா கணபதி என்ற டீக்கடைக்காரர் தன் மகளை சுவாமிகளின் அருகே நிற்க வைத்து புகைப்படம் எடுத்தார். அந்த புகைப்படத்தில் தன் மகள், சுவாமிகள் அமர்ந்திருந்த நாற்காலி மட்டுமே இருந்தது, சுவாமிகளை காணவில்லை. இதைக் கண்ட டீக்கடைக்காரர் சுவாமியின் ஆற்றலை அறிந்து தான் செய்த தவறுக்காக சுவாமிகளிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள்புரம் சுவாமிகளின் புகைப்படம் எங்கும் இல்லை. அப்படி இருந்தால் அது வரையப்பட்டதாகும். இக் கட்டுரையில் உள்ள ஆண்டாள்புரம் சுவாமிகளின் புகைப்படம் வரையப் பட்டதாகும்.

சென்னை சித்தார்த் தன் என்ற புகைப்பட கலைஞர் சுவாமிகளை புகைப்படம் எடுத்து பார்த்தபோது வெள்ளை யாக இருந்தது. சுவாமி களின் உருவம் பதிவாக வில்லை. இதையறிந்து சுவாமிகளை வணங்கி மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

பூஜை செய்ய வேண்டும் என்று சுவாமிகள் நினைத்தால் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து, அங்கு வழிபாட்டை துவங்குவார்கள். பின்னர் வழிபாடு முடிந்ததும், அந்த மெழுகுவர்த்தியை அனைத்து விட்டு அதனை தன் மடியில் கட்டிக் கொண்டு நடை பயணத்தை தொடர்வார்கள்.

அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள்புரம் சுவாமிகள் சீவ சமாதி வளாகத்தில் அவரது ஆத்ம சீடர் ஸ்ரீ அண்ணன் சுவாமிகளின் திருவுருவ கற்சிலை வைத்து தனி சன்னதியாக வழிபாடு செய்கிறார்கள்.

அருள்மிகு ஸ்ரீ அண்ணன் சுவாமிகளின் சீவ சமாதி வளாகத் தில் அவரது குருநாதர் அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள்புரம் சுவாமிகளின் திருவுருவ கற்சிலை அமைத்து வழிபாடு செய்கின்றனர்.

அண்ணண்சாமிகள்,

ஆண்டாள்புரம் சுவாமிகளின் மேல் அளவு கடந்த அன்பும், பக்தியும் வைத்திருந்தார். புதூருக்கு ஆண்டாள் சுவாமிகள் வரும்போது அண்ணன் சுவாமிகள் வசிக்கும் அறையின் நிலைவாசலை, சுவாமிகள் தொட்டு வணங்குவார் அண்ணன் சுவாமிகள். காளியின் அவதாரம் என்று கூறுவார்.



தன் சீடர் அண்ணன் சுவாமிகளுக்கு உடல்நிலை சரியில்லையென்றால் ஆண்டாள்புரம் சுவாமிகள் விபூதி தருவார். குருநாதர் ஆண்டாள்புரம் சுவாமிகளுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் அண்ணன் சுவாமிகள் விபூதி தருவார்.

ஆண்டாள்புரம் சுவாமிகளின் சீவ சமாதி ஆலயத்தில், மணியோசை கிடையாது, சங்கநாதம் கிடையாது, கைலாய வாத்தியம் இசைப்பது கிடையாது, திருநீறு பிரசாதம் கிடையாது, குங்குமப் பிரசாதம் கிடையாது, மாறாக ஊதுபத்தி சாம்பல் தான் திருநீறு.

இங்கு அமைதி உண்டு, அன்னதானம் உண்டு, பக்தி உண்டு, சித்தர் ஆற்றல் உண்டு. சீவ பீடத்தின் மேல் எங்கும் இல்லா அற்புதமானதாக இராமர், சீதை, இலட்சுமணன், ஆஞ்சநேயர் போன்றவர்களின் உருவ சிலைகள் உள்ளன.

ஆண்டாள்புரம் சுவாமிகளின் 1989 ம் வருடம் செப்டம்பர் 20 ம் தேதி சித்தியடைந்தார். வருடந்தோறும் செப்டம்பர் 20 ம் தேதி அமைதியாக, அன்போடு, அன்னதானத்தோடு குருபூஜை சிறப்பாக நடைபெறுகிறது.

ஆண்டாள்புரம் சுவாமிகளின் சீவ சமாதி அருள்மிகு "ஸ்ரீ அருணாலயம்" என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

ஸ்ரீ அருணாலயம் முகவரி : அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள்புரம் சுவாமிகளின் சீவ சமாதி ஆலயம், ஸ்ரீ அருணாலயம் பிரதான சாலை, கோமல், திருக்கார வாசல் அஞ்சல், திருவாரூர், தமிழ்நாடு.

(சென்னையில் இருந்து வருபவர்கள் திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் கோமல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி எதிராக உள்ள ஸ்ரீ அருணாலயத்தைக் காணலாம்)

பேருந்து வழித்தடம்: சென்னை திருவாரூர், திருவாரூர் திருத்துறைப்பூண்டி

இறங்குமிடம்: கோமல் பஸ் ஸ்டாப்

இரயில் மார்க்கம்: சென்னை – மன்னார்குடி எக்ஸ்பிரஸ்

இறங்குமிடம்: திருவாரூர் இரயில் நிலையம் இங்கிருந்து பேருந்து மூலம் கோமல் ஊரை அடையலாம். ஆட்டோ வசதியும் உள்ளது.

(தரிசனம் தொடரும்)

உடல் எடையைக் குறைக்கும் பாலக்கீரை



உடல் எடை குறைப்பவர்களுக்கு பாலக்கீரை ஒரு வரப்பிரசாதம். இதிலுள்ள கரோட்டினாய்டு என்ற லுடின், கொலுப்பை கரைக்கும் தன்மைக்கொண்டவை. இதனை உணவில் சேர்க்கும்போது, கெட்ட கொலஸ்ட்ரால் நம் உடலில் தங்குவதை தவிர்க்கலாம். தினமும் பசலைக்கீரையை டயட்டில் சேர்த்தால் நல்ல பலன் கிடைக்கும்.

இதில் கலோரிகள் குறைவாகவும், ஊட்டச்சத்துக்கள் நிறைந்ததாகவும் இருப்பதால், உடல் எடையை குறைக்கிறது. குழந்தைகளுக்கும் வலு சேர்க்கிறது.அதிக அளவு பொட்டாசியமும் உள்ளது. உயர் ரத்த அழுத்தத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மருத்துவர்கள் இந்த கீரையைதான் பரிந்துரைக்கிறார்கள்.

இதில், வைட்டமின் ஏ, வைட்டமின் சி, ஃபொலிக் சத்து உள்ளதால், மார்பக புற்றுநோய்க்கு எதிராக செயல்படும் தன்மை கொண்டது. மேலும் பாலக் கீரையில் நிறைவான ப்ளவனாய்டு நிரம்பியிருப்பதால், புற்றுநோய்க்கு எதிராக செயல்படுகிறது. நிறைய ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ள கீரை என்பதால், இதை உணவில் தவிர்க்கவே கூடாது.

சுண்ணாம்பு சத்தும், வைட்டமின் கே சத்தும், அதிகம் உள்ளதால், எலும்புகளையும் பற்களையும் வலிமைபடுத்த செய்கிறது. வளரும் குழந்தைகளுக்கு இந்த பாலக்கீரையை காரம் அவ்வளவாக இல்லாத குழம்பா கவோ, அல்லது சூப் போன்றோ தந்தால், எலும்பும், பற்களும் உறுதிப்படும்.

பெண்களுக்கான இரும்புச் சத்துக்கள் அதிகளவில் இதில் இருக்கிறது. எனவே, முடி வளர்ச்சிக்கு உதவுவதுடன், ரத்த உற்பத்திக்கும் துணைபுரிகிறது. ஹீமோகுளோபின் அளவையும் அதிகரிக்க செய்யும். பெண்களுக்கு உண்டாகும் வெள்ளைப்படுதல் பிரச்சனையை, இந்த கீரையை சமைத்து சாப்பிடுவதன் மூலமாக சரிசெய்யலாம்.

கோடைக்காலங்களில் ஏற்படும் வெப்பத்தின் காரணமாக வரும் அனைத்து கோளாறுகளையும் இந்த கீரை சரி செய்கிறது. ஆசன வாய் பகுதியில் ஏற்படும் புண், எரிச்சல் போன்றவற்றையும் இந்த கீரை குணப்படுத்துகின்றது. மூட்டு வலி, வீக்கம் இருப்பவர்கள் பாலக் கீரையை அதிகமாக உணவில் சேர்த்து கொள்ளலாம்.

இதய நோயாளிகளுக்கு ஏற்ற ஒரு சிறப்பான உணவுப்பொருள் இக்கீரை.

அக்கி நோயால் அவதிப்படுபவர்கள், தீப்புண், வெந்நீர் காயம், சொறி, சிரங்கு, காயங்கள் ஏற்பட்டாலும், கீரையின் இலையை



நன்றாக நசுக்கி அவைகளின் மீது தொடர்ந்து தடவிவந்தால் மெல்ல நிவாரணம் கிடைக்கும்.

பாலக்கீரையில் பலவிதமான உணவுகளை செய்யலாம். பாலக்கீரையை சுத்தம் செய்து கொண்டு, ஒரு மிக்ஸியில் சேர்த்து, சீரகம் இஞ்சி போட்டு அரைத்து எடுத்து கொள்ளவேண்டும்.. பிறகு, கோதுமை மாவில் உப்பு சிறிதளவு ஓமம் தண்ணீர், அதனுடன் கீரை விழுதையும் சேர்த்து நன்றாக பிசைந்து கொள்ள வேண்டும்.. இதை 20 நிமிடம் ஊறவைத்து, சப்பாத்தி செய்தால் சுவையாக இருக்கும்.

பாலக்கீரையில் அடை செய்யலாம். அரிசி, பருப்பை இரண்டையும் ஊற வைத்து அரைத்து கொள்ள வேண்டும். இஞ்சி பச்சை மிளகாய், பெருங்காயம், பாலக் கீரை போன்றவற்றை மிக்சியில் அரைத்து கொள்ள வேண்டும். வெங்காயம், பூண்டு இரண்டையும் வதக்கிகொள்ள வேண்டும். இப்போது அரைத்த மாவில், வெங்காயம், பூண்டு, மிக்சியில் அரைத்த விழுது என மொத்தத்தையும் கொட்டி கலக்க வேண்டும். இதில் உப்பு சேர்த்து கரைத்து, அடை போல சுட்டு எடுக்கலாம்.

பாலக்கீரையில் தோசை போலவும் செய்து தரலாம். கீரையை நன்றாக கழுவி பொடியாக நறுக்கி கொள்ளவும். அதேபோல வெங்காயம், பச்சை மிளகாயை பொடியாக நறுக்க கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு, வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து வதக்கி, பிறகு, பசலைக் கீரை, சிறிது உப்பு சேர்த்து, வெந்ததும் இறக்கவும். இவை அனைத்தையும், இட்லி மாவுடன் சேர்த்து, தோசை வார்க்கலாம்.

பாலக் கீரையை அலசி குக்கரில் போட்டு ஒரு விசில் வர வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். ஒரு குக்கரில் வாணலில், எண்ணெய் விட்டு சீரகம் சேர்த்து பொறித்து, வெங்காயம், இஞ்சி பூண்டு சேர்த்து வதக்கவும். பிறகு தக்காளி சேர்த்து வதக்கவும். இப்போது கழுவி வைத்துள்ள துவரம் பருப்பு, உப்பு சேர்த்துக் கொள்ளவும்.

தேவையான தண்ணீர் ஊற்றி இறக்கி, குக்கரை விசில் போட்டு மூடிவிடவும். பிறகு, பாலக் கீரையை அதில் சேர்த்து, ஒரு கொதி வந்ததும் இறக்கிவிடவும். ஒரு வாணலில் சிறிதளவு எண்ணெய், சீரகம், கடுகு, காய்ந்த மிளகாய், பூண்டு போட்டு தாளித்து பருப்பில் கொட்டினால், பசலைக் கீரை பருப்புக்கூட்டு தயார்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!


வாசகர் குரல்...

என் குருவிற்கு மிக்க நன்றி!

வணக்கம் அய்யா, செப்டம்பர் மாத இதழில் தாங்கள் எழுதிய எதிர்பார்ப்புகள் பெட்டிச் செய்தியை பற்றிய எனது சிறிய கட்டுரை. சிறியது ஆயினும் எளிமையானது, ஆனால் அர்த்தத்தில் மிகவும் ஆழமானது மற்றும் தாக்கம் அதிகம். படித்ததும் எனது அறிவுக் கண்கள் திறந்து கொண்டன. பெரிய கருத்துக்களை சில வார்த்தைகளில் விளக்குவது குருவின் உண்மையான குணம்.

"மனம் கடினமாகவும், இதயம் மென்மையாகவும் மாற வேண்டும் என்பது ஞான வார்த்தைகள் மற்றும் ஆன்மீகத்தின் உண்மையான சாராம்சம்". ஆன்மீகத்தை வரையறுக்க இதைவிட சிறந்த வழி இருக்க முடியாது. ஆன்மீக முயற்சிகளில் சுய முன்னேற்றத்தை அளவிட இந்த ஒரு வாக்கியம் பயன்படுத்தப்படலாம். ஞான வார்த்தைகள். மேலும் பிரார்த்தனையில் நாம் சாயியிடம் என்ன கேட்க வேண்டும் என்று அழகாக வழிகாட்டுகிறது.

இனி என் பிரார்த்தனைகளில் "வாழ்க்கையில் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை எனக்குக் கொடு" என்பதை நிச்சயமாகச் சேர்ப்பேன். "சரணாகதி" கொள்கையை நோக்கி நீங்கள்



செயல்படும் போது இது இயல்பான முற்போக்கு சிந்தனையாகும். இந்த ரத்தினங்களுக்கு நன்றி.

– திரு. சீனிவாசன் கொல்லூறு.
பள்ளிக்கரணை, சென்னை.

அமுதமொழி! எனக்காகவே பாபா எழுதிய ஆனந்த மொழி, நன்றி சாயி! திருவேற்காடு இராம தாஸ் சுவாமிகளின் சீவசமாதி தரிசனம் அருமை. எனது குருவின் சத்சரிதம் மிகச்சிறப்பு. பகவான் இரமணரின் ராஜமார்க்கம் தெய்

வீகம். கடைவேளை பெட்டிச் செய்தி அபாரம். 106 வது சமாதி தின கட்டுரை சிலை உருவான விதம் ஆச்சர்யம். மதிப்பிற்குறிய ஆசிரியருக்கு கோடானுகோடி நமஸ்காரங்கள். நன்றி!

இந்துமதி, அயனாவரம்.

பார்ப்பதற்கு சிற்றிதழ் போன்று இருந்தது. படித்ததும்தான் ஏனைய இதழ்களுக்கு இணையானது என்று புரிந்தது. ஆசிரியருக்கு வாழ்த்துக்கள். அன்பு பெட்டிச் செய்தி வாழ்க்கைக்கு அவசியம் தேவைப்படும் போதனை. மிகவும் சிறப்பான செய்தி. கடுகு சிறி தானாலும் காரம் குறையாது என்பதை நிரூபிப்பதாக இருந்தது.

செல்வி. பிரேமா சாய், பொள்ளாச்சி.

வணக்கம் சாய்ராம், நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் மாயவரம்தான் இருப்பினும் தங்களது இதழின் மூலமே குதம்பைச்சித்தரின் சமாதி எங்களது ஊரில் இருக்கின்றது என்பதை தெரிந்து கொண்டேன். மிக்க நன்றி சாய்ராம்.

திரு. மகாலிங்கம், மாயவரம்.

வணக்கம் அய்யா, நான் சாயி மகராஜ் குருவை தேடி வாசகி என்பதில் பெருமைப் படுகின்றேன். கொடம்புளி என்ற ஒரு உணவுப் பொருள் இருக்கின்றது என்று உங்களது இதழைப்பார்த்துதான் அறிந்து கொண்டேன். மேலும் என்னைப் போன்ற புதிய பாபாவின் பக்தைகளுக்கு நிறைய பாபாவின் செய்திகளை தந்திருக்கின்றீர்கள். எதை விடுவது, எதை படிப்பது என்றே தெரியவில்லை. மிக்க நன்றி அய்யா.

திருமதி. கலைச்செல்வி, கரூர்.

ஐம்பத்துஆறு பக்க புத்தகத் திற்கு பதின்மூன்று பக்க விளம் பரம் சற்று ஜாஸ்தி மாதிரி தெரிகின்றது. விளம்பரத்தை குறைத்து இன்னும் நல்ல செய்திகளை வெளியிடலாமே!

திரு. கோவி. தினகரன். பூந்தமல்லி, சென்னை.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி

இணையத்தில் படிக்க...

www.saidhyanalaya.org

சாய் தியானா

வாட்ஸ் அப் நம்பர்

99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. டி.கோவிந்தராஜூ குடும்பத்தார், பெங்களூர். ரூ.3000.

திரு. பாலகிருஷ்ணன்,அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திரு. பி. ராஜாமணி, டெல்லி, ரூ.1500.

திருமதி. பி. திருமலைச்செல்வி. கொளத்தூர். ரூ.1000.

திரு. உதி.மூர்த்தி. பெரம்பூர். ரூ.1000.

திருமதி. மகாலட்சுமி முருகன், மதுரை, ரூ.1000.

ஸ்ரீ சாய் மகராஜ், சென்னை. ரூ.1000.

திரு. கேஸ்வர், ஈரோடு, ரூ.700

திரு. எஸ்.ரமேஷ் பாபு,சென்னை.ரூ600.

திருமதி. லதா பாஸ்கரன், அண்ணாநகர், ரூ.501.

திரு. பத்ரிநாராயணன் நெய்வேலி.ரூ.500.

திருமதி.பிரியதர்ஷினி, கீழ்கட்டளை. ரூ.500.

திரு.கருணாமூர்த்தி.அயனாவரம். ரூ.500.

திரு.ரத்தினகுமார்-ரேவதி, வேளச்சேரி, ரூ.500

திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திருமதி. ஹேமா வைத்தியநாதன். குரோம்பேட்டை. ரூ.500.

திரு.பாபு லதா. வேப்பம்பட்டு, ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திரு. மதன் குடும்பத்தார். அயனாவரம். ரூ.201.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.

திருமதி. லலிதா. துரைப்பாக்கம்.ரூ.200.

திரு. விஜயன்.மனேஜர்,சி.சி பேங்க், கொளத்தூர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் - டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.

திரு.சூர்யாகுமார். கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திரு.பாலசுப்பிரமணியன், சீரடி. ரூ.108.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர். ரூ.101

திருமதி. பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100.

திருமதி. சரயுபாய். பெரம்பூர். ரூ.100.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100.

திருமதி. புவனா குடும்பத்தார். அயனாவரம். அரிசி. 2 மூ.

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா – ரூ.1000 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

- திரு. முனீஸ்வரன். கோவை. ரூ.500.
- திரு. சந்திரசேகரன்.பாண்டிச்சேரி, ரூ.250
- திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரம்பூர்.ரூ.200
- திரு. உமா சங்கர். பாடி. ரூ.200.
- திரு.வேணுகோபால், நங்கநல்லூர்.100.
- திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், .நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவித தமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068